148

ஆனந்த போதினி.

புஷ்பம் 12. [illegible]

[illegible] 1937.

JL
[illegible]
N37.12.3
159929

148

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திவ்யார்த்த தீபிகை.

(மாதந்தோறும் வெளிவரும் ஸ்ரீவைஷ்ணவ ஸமய ப்ரசார பத்திரிகை.)

ஆசிரியர்:—

ஸ்ரீகாஞ்சி. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்காசாரியர்.

சுஜடா நடிவஸஷொஹவஸஹாயி ஊயூஹொரா க்ஷீஷி: |
ஹரிதா ரவிகவஸ்ரீஜெதூ ஜீயாதிவ்யாய தீபிகா ||

பாடங்களின் பரிஷ்காரணங்கள்.

சென்ற ஆவணிமாதத்தில் வெளிவந்த வேதாந்த தீபிகையில் அடியேனுடைய இரண்டு ஆராய்ச்சிகளைப்பற்றி இரண்டு மஹான்கள் எழுதியிருந்த வியாஸங்களை வாசித்தேன். ஸ்ரீபாஷ்யத்தில் "ஊதிவூஸவஸஹூவாக" என்றிருந்த பாடம் "ஊதிவூஸவஸமூவாக" என்று மாறுபட்டது என்று அடியேன் வாதிகமாகவும் ஸூஷ்மமாகவும் பிரசாரம்செய்த விஷயத்தில் ஸம்ஸ்க்ருத பண்டிதர்கள் ஆராய்ச்சி செய்தருளிப் பொருளல்லாத வடியேனுடைய வார்த்தையைப் பொருளாக்கி சுஷிநநம் செய்திருப்பதுபற்றியும், உலகுக்கு உண்மையை விளக்கியிருப்பதுபற்றியும் பெருநன்றி பாராட்டுகின்றேன்.

பகவத்விஷயத்தில் ஒரு சிறு வாக்கியத்தில் அடியேன் விபுலமாகச் செய்திருந்த ஆராய்ச்சியைப்பற்றி மறுப்பு முறையில் ஒரு மஹான் எழுதியிருந்த வியாஸத்தை வாசிப்பதற்கு முன்னே அது விஷயத்தில் பத்ராதிபர்கள் வெகு அழகாகக் குறிப்பிட்டிருந்தவற்றை ஸேவித்துப் பரமாநந்தமடைந்தேன். பத்ராதிபருடைய அக்குறிப்பு சுருக்கமா யிருப்பினும் மிகவும் ஸாரமாக இருப்பதனால் அவ் விஷயத்தில் அடியேன் மீண்டும் எழுதவேண்டியதொன்றுமில்லை, ஆயினும் ஊஸமவஸாக சில விவக்ஷிதங்களை விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.

'கூஷூஜெரணம்வா' என்கிற ஸ்ரீராமாயண ச்லோகத்தில் [ஸாமூரஸூ ரணடு] என்று அந்வயிப்பதே யுக்தமென்று கூறுமவர்கள் ஒரு சிறு விஷயம் மாத்திரம் ஆலோசித்தால் போதுமானது. 'கூஷூஜெ ரணம்வாவி தாரணம் ஸா

ஸாகரஸ்ய வா' என்பதில், தாரணம் எதற்கோ அதற்கே மரணம் என்றுகொள்ளில், [அதாவது-தாரணகர்த்ருதமான வஸ்துவுக்கே மரணமென்னில்] ஸாகரபதத்தின் அர்த்தம் யாது? ஜலராசி என்று அர்த்தமா? அல்லது அதற்கு அதிஷ்டாத்ரு தேவதையாகிய வருணன் என்று அர்த்தமா? வருணனைத் தாரணம் பண்ணுவதாகச் சொல்லமுடியாததலால் ஜலராசியே இங்கு விவக்ஷிதமென்று திண்ணமாகத் தேறும். அப்படிப்பட்ட ஜலராசி விஷயத்தில் மரண பதப்ரயோகம் ஸமுசிதமென்று ஸம்ஸ்க்ருத பாஷையில் வாஸனையுடையார் சொல்ல ப்ரஸக்தியுண்டா? செடி கொடி மரம் மலை குளம் குட்டை ஏரி கடல் என்பனபோன்ற அசேதநப் பொருள்களுக்குச் செய்யும்கெடுதல்களை மரண பதத்தினால் நிர்த்தேசித்திருப்பதாக, இப்பூமண்டலத்திலுள்ள புத்தகங்களுள் ஏதேனுமொரு புத்தகத்திலாவது ஒருவர் காட்ட முன்வரக்கூடுமோ?

'இந்த வ்ருக்ஷத்தை வேரோடு வெட்டிப்போட்டுவிடுகிறேன்' என்று சொல்ல நினைப்பவர்கள் 'இந்த வ்ருக்ஷத்தை மரணமடைவிக்கிறேன்' என்று சொல்வது எப்படி இல்லையோ, எப்படி அஸம்பாவிதமோ, அப்படியே 'இந்த ஜலராசியை வற்றச்செய்துவிடுகிறேன்' என்று சொல்ல நினைப்பவர்களும் 'இந்த ஜலராசியை மரணமடைவிக்கிறேன்' என்று சொல்வது காலத்ரயத்திலும் அஸம்பாவிதமான விஷயமேயாகும். விவாதச்லோகத்திற்கு முன்னும் பின்னும் "ஸாகரோ ஶோஷணே நவா" என்றும், "ஸாகரம் ஶோஷயிஷ்யாமி" என்றும் இருப்பதை அபலாபம் செய்வார் ஆருமில்லையே. ஶோஷண பதமும் மரணபதமும் பர்யாயமென்று கொள்வதற்கு ஆதாரலேசமேனுமுண்டோ?

"ரஹஸ்யம் ச ப்ரகாஶம் ச யத்வ்ருத்தம் தஸ்ய தீமத꞉। தச்சாப்யஸ்ய விதிதம் ஸர்வம் ..." என்று விலக்ஷணமான வரம்பெற்ற வால்மீகிபகவான் இராமபிரானுடைய திருவுள்ளக்கருத்தையும் ஸாக்ஷாத்கரித்தே ச்லோகமியற்றியுள்ளார். பெருமாள் மரணமென்று உத்தேசங்கொள்ளாதிருந்தாராகில் மஹர்ஷி 'ஶுஷ்யே ஶோஷணம்வா' என்று வாக்யாநுபூர்வியை அமைத்திருப்பாரா? விவக்ஷிதாநுகுணமாக ச்லோகமியற்றத் தெரியாதா வால்மீகிக்கு? தகார ஶகாரங்களை மாற்றி எளிதாக அமைத்திருக்க என்ன தடை?

மூலகாரர்க்கு விவக்ஷிதமல்லாத பொருளையும் வ்யாக்யாதாக்கள் ஸ்வாரஸ்யாதிகளை நோக்கிப் பணிக்கலாமென்பதுமுண்டு. அப்படிக்கு இவ்விடத்தில் ஸ்வாரஸ்யலேசமுமில்லாததோடு அஸ்வாரஸ்ய பாஹுள்யமுமுள்ளது. ஸ்ரீ ராமாநுஜ ஸம்ப்ரதாயத்திற் சேராத இதர மதஸ்தர்கள் ஸ்ரீராமாயணத்திற்கும் மற்றும் பகவத்கீதை முதலானவற்றுக்கும் சொல்லுகிற பொருள்களைக் காட்டிலும் அத்யந்த விலக்ஷணமாகவே ஸ்ரீவைஷ்ணவாசார்யர்கள் சிலவிடங்களிலோ பலவிடங்களிலோ அருளிச்செய்துள்ளார்களென்பதையும் நாம் அறிவோம். அவ்விடங்களை ஆராய்ந்தால் எவ்விதமான க்லேசமுமின்றியே அந்வயக்ரமங்களை ரஸாபாஸமாக மாற்றுதலுமின்றியே உள்ளபடிக்கு இணங்கவே அருளிச்செய்ததாயிருக்குமத்தனையல்லது வேறுவகையாகக் கண்டதில்லை.

1,59929
22-11-86
137.12.3

இதற்குஇரண்டொரு நிதர்சநமும் காட்டுவோம். பகவத்கீதையில் (10-10) "தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம்। ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே॥" என்ற ச்லோகத்திற்கு பாஷ்யமியற்றிய சங்கராசார்ய ஸ்வாமிகள் ப்ரீதிபூர்வகமென்பதை பஜதாம் என்பதில் அந்வயித்து உரைத்தார். நம் உடையவர் அதை ததாமி என்பதில் அந்வயித்து உரைத்தருளினர். இங்கு க்லேசம் சிறிதுமின்றியே கிடைக்கிற அர்த்த ஸ்வாரஸ்யத்தை வித்வான்கள் உணர்வர்கள்.

ஸ்ரீராமாயணத்தில் யுத்தகாண்டத்தில் ராவணவதாநந்தரம் விபீஷணாழ்வானை நோக்கிப் பெருமாளருளிச்செய்யும் வார்த்தையாகிய "மரணாந்தாநி வைராணி நிவ்ருத்தம் ந꞉ ப்ரயோஜநம்। க்ரியதாமஸ்ய ஸம்ஸ்காரோ மமாப்யேஷ யதா தவ." என்கிற ச்லோகத்திற்கு உலகில் பலர் சொல்லிவருகிற அர்த்தத்தைவிட்டுப் பரமவிலக்ஷணமாயும் ஸ்ரீராமபிரானுடைய திருவுள்ளத்திற்குப் போரப் பொருத்தமாயும் நம்பிள்ளை அருளிச்செய்யும் பொருள் திருவாய்மொழியில் "கேசவன்தமர்" என்ற திருப்பதிகத்தின் ஈட்டின் ப்ரவேசத்தில் ஸ்பஷ்டமாகவுள்ளது. இங்ஙனே நூற்றுக்கணக்கான இடங்கள் நம் ஆசார்யர்களின் ஸத்ஸம்ப்ரதாய வ்யாவியாஸத்தை நன்கு காட்டக்கூடியவையாக உள்ளன. மூலவக்தாவுக்கு அபிப்ராயத்தைச் சிறிதும் காட்டாமலும் 'ஏலாதபொருளை ஏறிட்டுரைக்கின்றார்கள்' என்று எவரும் கருத இடமில்லாமலும், அஸ்வாரஸ்யாதிகளுக்கு அவகாசலேசமுமற்றதாகவும் உள்ள சிறந்த பொருள்களையே நம் ஆசாரியர்கள் அருளிச்செய்வது வழக்கம்.

அடியேன் ஸ்வபுத்தியைக் கொண்டு ஈட்டுப் பங்க்தியைத் திருத்துவதாகப் பிறர் எழுதுவது யுக்தமன்று. ஸ்ரீபாஷ்யத்தில் "ப்ரதிப்ரஸவவஸ்த்வாவாத" என்கிற யுக்தமான பாடத்தை அடியேன் ப்ராசீநதாளகோசத்தைக் காட்டியே விஜ்ஞாபித்தேனென்பதை ஸ்ரீ. உ. வே. பண்டித. வி. அனந்தாசார்யர் ஸ்வாமி (வேதாந்த தீபிகையில் வெளியிடுவித்துள்ள) தமது வியாஸத்தில் நன்கு நிரூபித்தேயிருக்கிறார். ஒவ்வொருவரிடத்திலும் நாம் ஓலை ஸ்ரீகோசங்களைக் கொண்டுபோய்க் காட்ட அவகாசப்படுமோ? 'இற்றைமுடிதல்' என்கிற பாடத்தை அடியேன் ஒரு ஸ்ரீகோசத்திலிருந்தே அறிந்தேனென்பதை இவ்விசாரத்தின் உபக்ரமத்திலேயே விஜ்ஞாபித்திருக்கிறேன். அரும்பதக்காரர்கள் என்பவர்கள் பிற்காலத்தவர்கள். அவர்களுடைய ஜ்ஞாநாதிக்யாதிகளில் யாரும் விவாதப்படுவாரில்லை. அவர்களது வசனங்களைச் சிரமேற் கொள்வாரைப் பற்றியும் நாம் வருந்துவோமல்லோம். திவ்யப்ரபந்த வியாக்யானங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அரும்பதவுரைகளில் எத்தனையோ இடங்களில் பாடிதாயுக்தவர்ணநங்கள் மலிந்து கிடக்கின்றன என்பது அவிவாத வசனமேயாகும். ஆகவே அரும்பதவுரைகளை அப்பால் வைத்திட்டுப் பூர்வாசார்ய திவ்யஸூக்திகளையே ஊன்றி நோக்கவேணுமென்பது அடியேனுக்குக் கிடைத்த ஆசார்யோபதேசம்.

ஸ்ரீராமாயணத்திற்கு விசேஷார்த்தங்களை அருளிச்செய்வதற்கு வெளதம் வயெஷண ப்ரவ்ருத்தரான பெரியவாச்சான்பிள்ளை ஷுகூதவிவாதஸ்லோகத்திற்கு வ்யுத்க்ரமாந்வயஸித்தமான பொருளைத் திருவுள்ளம்பற்றி யிருந்தாராகில் அதை விஸிஷ்டு எடுத்துக்காட்டி வியாக்யானம்செய்தருளாமற் போவரா? இந்த 'யானெட்டியென்னுள்' பாசுரத்திற்குப் பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்திருக்கும் இருபத்தினாலாயிரப்படியில் "ஈஷுமெஶரணம்வாவி தரணம் ஸாமரவஸுவா" என்று இவ்வளவு மாத்திரம் உதாஹரிக்கப்பட்டுளதேயன்றி அதற்கு அர்த்தமாக ஒரு அக்ஷரமும் எழுதப்பட்டிருக்கவில்லை. இதில் வ்யுத்க்ரமாந்வயம் செய்யவேணுமென்பது அவர்க்குத் திருவுள்ளமாகில், அப்படியே எம்பெருமானார் பட்டர் நஞ்சீயர் முதலான ஆசார்யர்களும் நிர்வஹித்து வந்திருப்பார்களாகில் அதைப் பெரியவாச்சான்பிள்ளை ஸம்க்ஷேபமாகவாகிலும் அருளிச்செய்யாது விடுவரோ? அர்த்தமருளிச் செய்யாதொழிந்தாலும் மூலத்தை உதாஹரிக்கும்போதே அப் பொருளுக்கு ஸூசகமான அந்வயக்ரமத்தைக் காட்டும் முகமாகவாவது உதாஹரித்திருக்கலாமே. அதுவுமில்லையே. ஷுவாத ஷுதீதமான அர்த்தம் பிசகு என்றும், தரண ஶரண பதங்களை மாற்றி அந்வயித்துக் கொள்ளும் பொருளே யுக்தமென்றும் நம் பூருவர்கள் திருவுள்ளம்பற்றி யிருந்தார்களாகில் அதை எவ்வளவோ அழகாக விளக்கி யிருப்பர்களே. பெரியவாச்சான்பிள்ளையா விவரணம் செய்யாது விட்டிடுபவர்?

"யாப்பிலக்கணத்துக்காகப் பதங்களை இடம்மாறி உபயோகிப்பது ஸர்வஸாதாரணம்" என்கிறார் நண்பர். இந்த வார்த்தைக்கு ப்ரக்ருத ஸ்தலத்தில் என்ன ப்ரஸக்தி? தவஸாயுாயதிரதஃ என்கிற ச்லோகத்தில் 'வாஜீகிஃ ஶாநிவாமவம் நாரதம் வரிவஷுஷ' என்ன வேண்டுவது யாப்புக்காக "நாரதம் வரிவஷுஷு வாஜீகிஶாநிவாமவஃ" என்றுவிழுந்திருப்பதுவாஸ்தவம். இங்ஙனே பல்லாயிரமிடங்களுண்டு. "ஈஷுமெ தரணம்வாவி ஶோஷணம்ஸாமரவஸுவா" என்றால்யாப்பிலக்கணம் வழுவுவதுண்டோ? "ஸராஜ்யம்மாராணா உதஃ" என்பதை ஸதத்தம் மாராணா ராஜ்யஃ என்றும் மற்றும் பலவகையாகவும் சொல்லப் பொருந்துமாயினும் கவி ஸ்வேச்சாநுகுணமாகச் சொல்லிவைத்தார் என்பதுபோலே ப்ரக்ருத ச்லோக விஷயத்திற் சொல்ல நினையார்கள் ஸம்ஸ்க்ருத பாஷையின் சுவடறிந்தவர்கள்.

ஐதம் தாஷூஸவெயெஃ ॥ பிறர் கருதுகிறபடி வால்மீகிக்கு விவக்ஷிதமாகில் இந்த ச்லோகத்தில் ஶரணபதம் தலைகாட்டவே தகாது, அதன் ஸ்தானத்தில் ஶோஷண மென்கிறபதமே இருந்து தீரவேண்டும், அதுவும் இரண்டாவது பாதத்தில் இருக்கவேணும். என்கிறவித் ஶாவஷுதஶேவாதஃ.

ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் (5-34-31) "ஸவஷெ ஹமவநு கூதர விதூஹஷவதுாய ஒஶ । ஸஶாதிஷதா கூஷஸு தத்ஸாதாநஹெஶூர."

என்கிற ச்லோகம் ரஸிகர்களால் குறிக்கொள்ளத் தக்கது. [ஒஶ விதூஹஷஃ கூஷஸு வயாய] என்கிற அந்வயம் இங்கு விவக்ஷிதம். காசிராஜனைக் கண்ணபிரான் கொன்றொழித்த பிறகு அவனது புதல்வனுடைய வார்த்தை இது. 'என்னுடைய தந்தையைக் கொன்ற க்ருஷ்ணனைக் கொல்லும் பொருட்டு' என்கிற அர்த்தம் இங்கு விவக்ஷிதம். ஆனால் இங்கு ஶஷுவஸஹிவெஶம் [வயாய ஒஶ] என்று விழுந்திருக்கிறது. இங்கே வியாக்கியானம் செய்துள்ள மஹான்கள் எதிர்கால நிகழ்ச்சிக்குத் தக்கபடியே அவன் வாக்கில் பரவஶமாகவே அப்படிப்பட்ட வாக்ய ப்ரயோகம் வந்ததென்று காட்டுகிறார்கள். இந்த ப்ரயோகம் கவிசாதுர்யத்தை நிலைநாட்டி நிற்கும். கவிசக்ரவர்த்தியான கம்பரும் இங்ஙனே தம் வாக்கின் வல்லமை விளங்குமாறு பல செய்யுட்கள் பாடியுள்ளார். விராதன் வதைப் படலத்திலுள்ள "ஆதி நான்முகன் வரத்தினெனதாவியகலேன்" என்ற செய்யுளை இங்கு ஒரு நிதர்சனமாகக் கொள்க. விராதனது செருக்கு மொழியாகிய இதனில், தான் இறப்பதை முன்னமே தெரிவித்துக் கொள்வதான அமங்கலப் பொருளும் தோன்ற நின்றது.

இப்படிப்பட்ட விபரீதப் பொருள்களும் கூடவே தோன்றுமாறு கவியியற்றுவது ஆஸுரப்ரக்ருதிகளின் விஷயத்திலுண்டே யல்லது எம்பெருமான் விஷயத்திலாவது பகவத் பக்தர்கள் விஷயத்திலாவது கிடையாது. ஆகவே, ப்ரக்ருதத்தில் ஸாமரஸு ஶரணமென்பதே ஸ்ரீராமபிரானுக்கும் வால்மீகி பகவானுக்கும் விவக்ஷிதமாயிருந்ததென்னும் பக்ஷத்தில் ஈஷுமெஶரணமென்று விபரீதார்த்த வொயகமாக ச்லோக ஸந்நிவேஶம்இருப்பது கவிக்கு கதுஹவோதா யத்தையே நிலைநாட்டுவதாகும். கவிஸார்வபௌமரான வால்மீகி இந்த கவஷுதிக்கு ஒருநாளும் இலக்காகமாட்டார். பலபல இடங்களில் ஸ்ரீராகவன் தன்னுடைய மநுஷ்ய ஹாவனைக்குச்சேர ஸஶரண ஷுஸாவத்தைச் செய்துகொண்டிருப்பது போலவே இங்கும் அதுதன்னைச் செய்துகொண்டாரென்கிற உண்மையைக் காட்டவேண்டியே வால்மீகி முனிவர் இங்ஙனே ச்லோக மியற்றினாரென்பதே தத்துவம்.

தம்முடைய ஶக்தியில் ஸந்தேஹலேஶமுமில்லாதவரும் "ஸவஷூயா ஸஸஶயெஷாஷி ஸாமரவஸூவஷுமம்வெநெ" என்று தோள்கொட்டிச் சொன்னவருமான பெருமாள் திருவாக்கில் ஒஶ ஶரணமென்று வருவதற்கு அவகாஶமேயில்லையென்று வாதிக்குமவர்கள், அப்பெருமாள் திருவாக்கில் அப்படிப்பட்ட வாசகம் வந்ததாக முனிவர் ஏன் கவி இயற்றினாரென்று அம்முனிவரையே கண்டு கேட்கவேணும. தரணதாஷுஷு திவாதந ஷுணாளியிறேயிது.

வால்மீகிராமாயணத்தை தெலுங்கு, ஹிந்தி, கன்னடம், வங்கம், முதலிய பல பாஷைகளில் பல மஹாகவிகள் கீர்த்தனை முதலியனவாகப் பாடியுள்ளார்கள். அவைகளைக் கண்டபாடஞ்செய்து ஓதுமவர்களும் பலருள்ளார்கள். ஒன்றிலாவது ஸாமரஸு ஶரணமென்று அந்வயித்துப் பாடினதாகக் கேட்டிலோம்.

பூருவாசாரியர்களின் காலத்தில் ஸ்ரீராமாயணத்திற்கு உடாலி வ்யாக்யானமே ப்ரஸித்தமாக இருந்தது. "ஜகாதிசாஸீ யதோஜாதா" என்ற விடத்திற்கு "யதோக்தஸ்ரீஜாதா என்றான் உடாலி." என்று ஈட்டிலும் அருளிச்செய்கிறார். அவ்வண்ணம் பூருவர்கள் மெச்சின வியாக்கியானத்திலும் இவ்வர்த்தம் கண்டதில்லை. ஸ்ரீகோவிந்தராஜரும் இப்படி யெழுதியிருக்கவில்லை யென்று பண்டே பரக்க நிரூபிதம். இப்படியெல்லா மிருக்க, "இத்தை முடித்தல்" என்று கைப்பிசகாகச் சிலர் எழுதியிருந்ததையும் அதற்குச் சேரச் சிலர் விவரணமிட்டிருப்பதையுமே நிதியாகக் கொண்டுபோருகிறோ மென்பாரை மறுப்பாரார்? ஸூக்ஷ்மதர்சிகளைத் திருத்தக் கனவிலும் நினையோம்.

அடியேனுடைய தத்வப்ரதிஷ்டா க்ரந்தத்தில் பிறர் மனம்நோகத்தக்க வாசகம் ஒன்றுகூட இல்லாதிருக்க, அத்தகைய வாசகங்கள் பல இருப்பதாக நண்பர் எழுதுவது நியாயமன்று. இருந்தால் தீபிகை வாயிலாகவே உதாஹரித்துக் காட்டலாம். பண்டித பரிபாஷையில் "தஸ ஸம்பஸ்ய, ஸமீக்ஷஸ்ய, ஸ்ராவணீயஸ்ய" இத்யாதி ரூபங்களான வசந வ்யக்திகள் தாராளமாகவுண்டென்பதை ஸ்ரீபாஷ்யம், ஸஹஸ்ரநாம பாஷ்யம் முதலானவற்றில் பரிசயம் பண்ணினோர் அறிவர். "ததிதம் ஸவிசித ஸமவஸ்ரு ஸாவஸ்ய ஸாக்ஷஸ்ய ஸெஸாவஸ்ய" என்றும், "நதேத்ர நிரவத்ய நாஸ்தி: ஸவிதா ஸ்ராவணீயா:" என்று முள்ளன பட்டர் ஸ்ரீஸூக்திகள். ஸ்ரீபாஷ்ய ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் இதற்கும் மேலாகப் பல ஸ்ரீஸூக்திகள் காணலாம். மஹான்கள் அங்ஙனே அருளிச்செய்தாலும் நீசனேன் நிறையொன்றுமிலேனாகிய அடியேன் அப்படிப்பட்ட வாசகங்களில் ஏகதேசமும் எழுத அநதிகாரியே என்பது நிர்விவாதம்.

இந்த ஸம்ப்ரதாயம் விஷயமாக இதற்கு மேற்பட எழுதவேண்டியது யாதொன்றுமில்லை. நம்முடைய பூர்வாசார்யர்களின் திவ்ய க்ரந்தங்களில் பல இடங்களில் சொற்கள் மாறியும், உள்ள பங்க்திகள் விடுபட்டும், இல்லாத பங்க்திகள் வந்து புகுந்தும் ஆக இப்படிப்பட்ட விபர்யாஸங்கள் ஆங்காங்குக் காணப்படுகின்றன வென்பதுபற்றி க்ரமேண விபுலமாக விஜ்ஞாபனம் செய்துகொள்வேன். "பலகாலமாய் காலக்ஷேபம் ஸாதித்துவருகிற மஹாமஹா வித்வான்களுக்குத் தோன்றாத விஷயங்களை எடுத்துரைக்க இவனார்?" என்று திருவுள்ளம் பற்றுமவர்களைப்பற்றி வக்தவ்ய மொன்றுமில்லை. விமர்ச ரஸிகர்கள் கவனிப்பார்களாக.

அபூர்வ ஆராய்ச்சிகள்.

ஸாமாந்ய கவிகளின் அருமையான வாக்குக்களில் நேர்ந்துள்ள சில பிறழ்வுகளை ஈண்டெடுத்துக் காட்டி ரஸிகர்களை விநோதம் செய்வோம். குவலயாநந்தத்தில் தத்குணாலங்கார ப்ரகரணத்தில் — "ஸஞ்ஜாதவக்த்ர ப்ரகராக்நிதாநி ஸமுத்ஸஹந்தி ஸ்வபதாரவிந்த | விகஸ்வராண்யக்ஷுகராபிதாநி வக்ஷாம்ஸி ஸூரீணாம்॥" என்கிறவொரு ச்லோகம் உதாஹரிக்கப்பட்

டுள்ளது. இதில் த்ருஷ்டாந்தரின் முகங்களுக்கும் வக்ஷங்களுக்கும் ச்லேஷஸம்பந்தியினால் ஸாம்யம் நிர்வஹிக்கப்பட்டுளது. இதில் "ஸஞ்ஜாதவக்த்ர ப்ரகராக்நிதாநி" என்கிற ப்ராயோகிகவிசேஷணத்தை ஸாவதர்கள் நன்கு பராமர்சிக்கவேண்டும். வக்ஷங்களுக்கு ஸஞ்ஜாதவக்த்ர ப்ரகராக்நிதத்வம் உள்ளதுதான். இது முகங்களுக்கு எப்படி? என்று விமர்சிக்கவேணும். இங்கு வியாக்கியானம் செய்தவர் ஏதோ எழுதியிருக்கிறார். அதனால் விவேகிகள் த்ருப்திபெறார்கள். இங்கு ஒரு பிறழ்வு. ஸஞ்ஜாத என்பதை [ஸஜ்ஜாத] என்று திருத்தி வாசித்துப்பாருங்கள். [ஸஜ்ஜை: க்ருதவக்த்ர ப்ரகரை: ஸ்நிக்தாநி த்ருஷ்டாந்தாநி] வேனிற் காலத்தில் எங்குப்பார்த்தாலும் குடைமயமாகவே யிருக்குமன்றோ? ஸஜ்ஜங்களான [ஸஜ்ஜங்களான] க்ருதவக்த்ர ப்ரகாரங்களோடே — குடைகளின் கூட்டங்களோடே, ஸ்நிக்தாநி என்றாயிற்று. வக்ஷவக்ஷத்திலும் ஸஜ்ஜை: — ஸ்ராவேஷு:, ஜாதை: — ப்ராதுர்பூதை:, வக்த்ரப்ரகரை: — கேஸஸமூஹை: ஸ்நிக்தாநி என்றாகிறது. இப்போதுள்ள ஸ்வாரஸ்யாதிசயத்தை ரஸிகர்கள் நன்கு உணர்வார்கள்.

மற்றொன்றுங்காண்மின்; குவலயாநந்தத்திலேயே விஷமாலங்கார ப்ரகரணத்தில், "யஸோஸீதே வரதராஜஸ்யே" என்று தொடங்கி "ஸா நாதிர்பூஸா ஸா ஸமக்ஷம் ஸ்வரோஜஸோஹாஜோஹாத்ருதாஸ்ய கிரணோத்கர ஸாப்ரஹாதம் | தஸ்ரோதிருபேதே ஹாதவஹாக க்ஷணமாஸ்யராமே தாவம்ஹஜத்ரநாதிநம் ஸஹிதோதாவ:॥" என்கிற ச்லோக முதாஹரிக்கப்பட்டுள்ளது. இது தேவப்பெருமாள் விஷயமாக அப்பய தீக்ஷிதர் இயற்றிய ச்லோகம். இதன் கருத்தாவது — பேரருளாளனே! ஸூர்யனானவன் உன்னுடைய திருவடித்தாமரையின் மிகச்சிவந்த சோபையைத் தான் அடைய விரும்பினான். [ஸூர்ய கிரணங்கள் இரவில் அக்நியை ஆவேசிக்கின்றனவென்று வேதத்திற் கூறப்பட்டிருப்பதை ஸ்மரிப்பது.] என்னசெய்தால் தன் கிரணங்கள் தேவப்பெருமாளுடைய திருவடிபோல் சிவக்கும் என்று பார்த்து, இரவெல்லாம தன் கிரணங்களை அக்நியில் புகுவித்து ப்ரஹாதவயதும் நன்றாகக் காய்ச்சினான். நல்ல சிவப்பு உண்டாய்விட்டதென்று கண்டு அக்நியில் நின்றும் கிரணங்களை யெடுத்து வெளியில் பரப்பினான். அவை முதலில் ப்ரஸரிக்கும்போது சிவந்திருந்தாலும் க்ஷண காலத்திற்குள் சிவப்பு மாறிப்போகவே 'ஐயோ! நாம் மிகவும் சிரமப்பட்டுச் செய்த காரியம் அற்ப பலனாய்த் தலைக்கட்டிற்றே!' என்று ஹ்ருதயத்தில் தாபத்தை யடைந்திட்டான். அந்தத்தாபமே வெய்யிலாகக் காண்கிறது. இவ்விதமாக அவன் முயற்சி செய்வதும், அது அற்பபலனாவதும், அதனால் அவன் தாபமடைவதும் ஒருநாள் இரண்டுநாள் அன்று; அநாதிகாலமாக நாடோறும் இந்த ஸம்பவம் நிகழ்ந்து வருகின்றது என்பதாம்.

இந்த ச்லோகத்தில் "ஸஹிதோதாவ:" என்பதற்கு எங்கே அந்வயம்? என்ன அர்த்தம்? என்று பராமர்சிக்கவேணும். வியாக்கியானம் செய்தவர் எழு

தியிருக்கும் பொருள் விரஸமேயாகும். "ஸஹிஜாதா:" என்று திருத்தி வாசித்துப் பாருங்கள். இப்போது மிகவும் ரஸ்யமான பொருள் கிடைக்கும். ஸூர்யன் செய்தகாரியம் பயன்படவில்லையாகில் அவன் அதை விட்டுத் தொலைக்கலாமே; ஒவ்வொருநாளும் முயற்சி செய்வதும் வருந்துவதுமாக இருப்பானேன்? "தாவம்ஹஜதி நாபிநம்" என்கிறீரே, இவ்வளவு மூடனா அந்த ஸூர்யன்? என்று கேள்வியுண்டாக, அதற்கு விடை கூறுகிறார் [ஸஹி ஜாத:] என்று. "ஶநிஜள ஸம்ஹார்கராள ஹாயாவைவஸ்வதா ஸிதாக்ருஜ:" என்ற அமரகோசத்தின்படி ஜட னென்னும் பெயரையுடையனாகிய சநியானவன் ஸூர்யனது புத்திரன் என்பது ப்ரஸித்தம். "காரணகுணா: கார்யே ஸங்க்ராமந்தி" என்கிற நியாயத்தின்படி பிதாவான ஸூர்யன் மூடனானபடியால்தான் புத்திரனும் மூடனாகப்பிறந்தான். புத்திரனுடைய ஸாக்ஷாஸித்தமான ஜடத்வத்தைக் கொண்டு பிதாவின் ஜடத்வத்தை அனைவரும் அறியலாமென்று வெகு சமத்காரமாகக் காட்டினாராயிற்று.

இங்ஙனே கவியின் விவக்ஷையைக்கொள்ளாவிடில் (ஸஹி) என்றது மிகவும் பயனற்றொழியும். இந்தத் திருத்தங்கள் ஸஹஸா அடியேன் செய்பவையல்ல. ஸாபராதிக ஸாஹஸ்ரணீ நாமஸித்ராயா கநந்தனே நிக்ஷேதயம் |

ஒரு அக்ஷரத்தின் விபர்யாஸத்தினால் ஏற்படுகிற ரஸஹாநம் எவ்வளவென்பதை விவேகிகள் ஆழ்ந்துணரவேணும்.

பாடம் மாறுபடாமலிருக்கு மிடங்களிலும் வ்யாக்யாதாக்களால் விளைவிக்கப்படுகிற அர்த்தவிபர்யாஸங்களுக்கும் இங்கு ஒரு நிதர்சநம் காட்டுவோம். ரகுவம்சம்இரண்டாவது ஸர்க்கத்தில் — "ஸஞ்சாரபூதாநி திகந்தராணி க்ருத்வா திநாந்தே நிலயாய கந்தும் | ப்ரசக்ரமே பல்லவராகதாம்ரா ப்ரபா பதங்கஸ்ய முநேஶ்ச தேநு:||" என்பது ஒரு ச்லோகம். இதில் "பல்லவராகதாம்ரா" என்பதற்கு [பல்லவத்தினுடைய சிவப்புப் போலே சிவந்த] என்று மல்லிநாதர் அர்த்தம் பண்ணுகிறார். ஒரு பதார்த்தத்திற்கும் மற்றொரு பதார்த்தத்துக்கும் உபமாநோபமேயபாவம் கல்பிப்பது ஸம்மதமாகுமோ? பல்லவதாம்ரா தேநு: என்னலாமே யொழிய வேறுவகையாகச் சொல்லலாமோ? (தேநு வத்ஸவாத்ஸல்யராகா) என்னலாமே யல்லது தேநுஸௌஜ்யபூர்வவத்ஸலாராகா: என்னத் தகுதியில்லையன்றோ? ஒரு பிரயோகமும் இங்ஙனே கிடைக்கவும்மாட்டாதன்றோ? மஹாகவியின்வாக்கான ப்ரக்ருத ச்லோகத்தில் பொருள் அதுவன்று. பத்மராகம், புஷ்பராகம் என்பதுபோலே பல்லவராகம் என்பது ரத்நவர்ண ரத்நவிசேஷம் என்று வைத்யசாஸ்த்ரஜ்ஞர்கள் சொல்லுகிறார்கள். அந்தப் பொருளே இங்கு விவக்ஷிதம். இப்போது அஸாமஞ்ஜஸ்யமே யில்லையன்றோ.

ஆழ்வாரெம்பெருமானார்ஜீயர் திருவடிகளே சரணம்.

தத்வநிவேதநம்.

ஸ்ரீமதாகம [illegible] ஸூக்திஷு [illegible] தத்வ நாமதேய [illegible] |
விதுஷாம் [illegible] தத்வநிவேதநம் ஶாஸ்மஹே ||

அடியேனுடைய ஸதாசார்யஸூக்திரக்ஷா, ஸ்ரீகேசவஸூக்திவிமர்சநம் முதலிய க்ரந்தங்களை ஆழ்ந்து அநுபவித்திருக்கின்ற மஹான்கள் ஸந்நிதியில் கைகூப்பிச் செய்யும் விண்ணப்பம்.

ஆசார்யஹ்ருதயம் வ்யாக்யானத்தில் ஆச்சான் பிள்ளையருளிச்செய்த திவ்யஸூக்திகளின் மீது பிறர் கூறிய தூஷணங்களெல்லாவும் பயனற்றவை என்பதை முன்னமே நாம் விரிவாக விளக்கியுள்ளோம். "வணங்குந் துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பால் பிணங்குஞ் சமயம் பலபலவாக்கி" என்று ஆழ்வாரருளிச் செய்தபடி பலவகைச் சமயங்களிலும் விகற்பங்கள் ஏற்பட்டுள்ள வேளைக் சமயங்களில் அவரவர்கள் ஸம்ப்ரதாயப்படி சொல்லிப்போரும் அர்த்தங்களில் நாம் பிணைபாராட்டுவோமல்லோம். [illegible] ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாய [illegible] ஸம்ப்ரதாயஸ்தர்கள் நிர்வஹிக்கில் [illegible] நிர்வஹிக்கட்டும். அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆச்சான் பிள்ளையின் அருளிச்செயல் [illegible] என்றும் [illegible] என்றும் பிறரால் செய்யப்பட்ட ஆக்ஷேபங்கள் [illegible] ஏற்பட்டவை என்கிற விஷயத்தை நிரூபிக்கவே நாம் ப்ரவர்த்தித்தோம். இவ்விசாரம் [illegible] கிரந்தப்ரகாசப்படிக்கு இதனை நாம் ஸம்க்ஷேபித்து ஸ்ரீகேசவஸூக்திவிமர்சநத்தில் மிகத் தெளிவாக விவரித்தோம். "[illegible]" என்னும்போலே ஒன்றிட்டுக் கொண்டு எழுதிக்கொண்டிருக்கப் பிரதிபக்ஷிகளின் [illegible] ஒரு ப்ரசாபத்ரிகை வெளியிட்டு [illegible] கேள்விகளுக்கு [illegible] உத்தரம் வெளிவரு [illegible] செய்துவிடுவதாகவும் அதில் [illegible] ப்ரதிஜ்ஞை செய்திருக்கிறார். பிரதிபக்ஷிகள் உண்மையில் பிராமாணிகர்களாக இருந்தால் அந்த வினாக்களுக்குப் பதில் கட்டுவரியில் அழகாக விடையெழுதி விட்டு பிறகு எதையாவது எழுதலாம். உண்மையில் உத்தரமுரைக்க அவர்களுக்கு விஷயலவலேசமுமில்லாமையாலும், வெறுமனேயிருந்துவிட்டால் வெட்கம் பாதிக்கிறபடியாலும், ஏதாவது ஒன்றையெழுதிக் கண்ணைத் துடைத்துக் கொள்வோமென்று தீர்மானித்த ப்ரபல பண்டிதர்களுக்கு ப்ரதிநிதியாக ஸ்ரீமான் உத்தமூர் வீரராகவாசாரியரென்பவர் சென்ற மார்கழி பாதத்து ஸமரஸ்த்தில்

பத்திரிகையில் ஓர் விண்ணப்பம் வெளியிட்டுள்ளார். இது நான்கு பக்கங்கள் கொண்டது.

நம்முடைய ஸித்தாந்தத்திற்கு இவர் உண்மையாக உத்தரம் உரைக்க வல்லவராயிருந்தால் ஸம்க்ஷிப்தவாக்யங்களை ஓரே பக்கத்தில் வெகு அழகாக எழுதி முடித்திருக்கலாம். அதற்குச் சரக்கு இல்லாமையாலே நிருகாரணமான அப்ரஸ்துத வசநக்கணக்கிலே சிலவிண்ணப்பங்களைப் ப்ரஸங்கிக்கப்புகுந்துவிட்டார்.

இவரும் இவரைச்சேர்ந்தவர்களும் இதுவரையில் எழுதி வெளியிட்டுள்ள சுவடிகளால் சில பாமரர்களாவது வஞ்சிதர்களாவதற்கு வழியிருந்தது. இப்போது அதுவுமில்லையாயிற்று. தம்முடைய நிலைமையைத் தாமே நன்கு வெளியிட்டுக்கொண்டாராயிற்று. இவர் தாம் ஸமர்த்திக்கிருக்கும் தஸ்வாக்யங்களை எழுதி வெளியிடலாமா வேண்டாமா என்று ஆலோசித்துக்கொண்டிருப்பதாகவும், இப்போது எழுத விருப்பமில்லையென்பதாகவும் தமது விண்ணப்பத்தைத் தலைக்கட்டியுள்ளார். அந்தோ! வஸ்திதஸ்வாஸ்தித்வ ப்ரக்ஷ்யமிருந்தபடி மிகவு மழகியதே. இப்படியும் ஒரு விண்ணப்பமெழுதுவாருண்டோ?

ப்ரக்ருத விஷயத்தில் நாம் எழுதியுள்ள க்ரந்தங்கள் நான்கு. 1. வாதிகாலஹம்ஸாம்புவாஹதஸ்வம். 2. ரக்ஷாவிமோசநஹாஸப்ரகாசிகா. 3. ஸதாசாரஸம்ப்ரோக்ஷா. 4. ஸ்ரீதேசிகஸம்ப்ரதாயஸ்வரூபநிஷ்டை. இவை தவிர, வேதாந்த தீபிகை, திருவரங்கம் பெரியகோயில் முதலான பத்ரிகைகளில் வெளியிடுவித்த வியாஸங்கள் தனிப்பட்டவை. மேற்குறித்த நான்கு க்ரந்தங்களிலும் விஷய நிரூபணவைலக்ஷண்யங்களில் ஏதோ விபரீதமிருப்பதாக இந்த உத்தமரர் விஜ்ஞாபிக்கிறார். விபரீதஸம்பந்தமும் கிடையாது. 'விஸ்ஸ்ருஷ்ட' என்கிற சப்தவிஷயத்திலே வைதிகஸார்வபௌமர் தேசிகனுக்கு ஸாக்ஷாத்ஸம்ஹாரணை பண்ணினர்—என்று நாம் பாதுகாஸஹஸ்ராவதார தத்வத்தில் எழுதியிருப்பதாக இவர் காட்டுகிறார். ஸுந்தராசாரியர் என்கிற ஒருவர் எழுதியிருந்த பங்க்திகளை நாம் அப்படியே அங்கு எடுத்தெழுதியுள்ளோம். "அதில் பக்கம் 19-ல்) "இதி ஸாக்ஷாத்தேசிகஸம்ப்ரதாய ஸம்ரக்ஷகாசார்யா:" என்றும் ஸ்பஷ்டமாக எழுதிமுடித்திருக்கிறோம். அந்த பாரா முழுவதும் ஸுந்தராசார்யருடைய வாக்யாநுவாதமே. அதனைத்தெரிந்துகொண்டும் இவர் அந்யதா எழுதியிருப்பது யாரை வஞ்சிக்க? ஸம்பாவனைபண்ணியிருப்பது பொய்யோ?

ரக்ஷாவிமோசநஹாஸப்ரகாசிகையில் (15-வது பக்கத்தில்) "வைதிக ஸார்வபௌமர் தூஷித்த விஷயம் வேறு, தேசிகன் ஸச்சரித்ரரக்ஷையில் அருளிச்செய்தது வேறு, ஆக தேசிகனை அவர் தூஷித்தபடியல்ல." என்று நாம் எழுதியிருப்பதாக இவர் வரைந்திருப்பது முழுமோசம். அப்படி நாம் எழுதியேயிருக்கவில்லையென்பதைக் கண்ணுடையார் காணலாம். விஸ்ஸ்ருஷ்டஶப்தவி,

விஸ்ஸ்ருஷ்டவாக்ய உதாஹ்ருதப்ரயோகங்கள் ஸாமாந்யங்களே என்றும் இங்கு அதூஷணமென்றும் தேசிகனுடைய திருவுள்ளம். அதை நன்றாகக் கண்டித்தே வைதிகஸார்வபௌமர் எழுதியுள்ளார். அதூஷணமென்பது உதாஹ்ருதவிதமென்றே அவர் எழுதியிருக்கிறார். இவ்விஷயங்களையெல்லாம் நாம் விளக்கமாகவேயெழுதி, வைதிகஸார்வபௌமருடைய வாக்யங்கள் தேசிகதிவ்ய ஸூக்திப்ரத்யவஸ்தாநார்த்தமே பிறந்தவை என்பதை நன்கு நிலைநாட்டியிருக்க, இவர் மாறுபாடாக எழுதுவது என்னே? இந்த உத்தமரர்க்கு விப்ரதிபத்தியும் விபரீதஜ்ஞாநமும் தவிர வேறுகிடையாதென்பதை ப்ராமாணிகர்கள், நன்குணர இவ்விஷயமொன்றே போதும். நாம் எழுதாத விஷயத்தை (பக்க லக்கமும் கொடுத்து) இவர் அதிஸ்ருஷ்டராய் எழுதத்தொடங்கிவிட்டார். "உஹ யோர நயோ: ஸ்ருஷ்டஸம்ஹாரயோ: ப்ரத்யாஸத்யப்ரத்யாஸத்யஹாநவோ நாவஸ்தோபாலம்பகத்ய:" என்று கல்வெட்டாக அதில் நாம் எழுதியிருக்கிறோம். ஸச்சரித்ரரக்ஷாஸூக்திகள் தோழப்பருடைய வாக்கியங்களால் ப்ரத்யவஸ்தாநமடைந்தே தீருகின்றன என்பதை எவ்வளவோ விரிவாக நிரூபித்திருக்கிறோம். அப்படியிருக்க இவர் இப்போது மாறுபாடாக எடுத்துக்காட்டுவது ஸ்வோக்தி வைகல்யத்தாலா, அஸ்ப்ருஷ்டவர்ணஜ்ஞத்தையினாலா, விப்ரலிப்ஸா வைசஸ்யத்தாலா என்பதை விவேகிகளே நிஷ்கர்ஷிக்கவேணும்.

ஆச்சான்பிள்ளையின் ஸ்வாதிநயநம் எது? என்பது ஒரு விசாரம் ஸ்ரீநாராயண அரணாநு என்பதே என்று நாம்நிரூபித்துவந்தோம். அதுவன்று என்றும், ஸ்ரீஸநாராயண அரணாநு என்பதே என்றும் உத்தமரர் ப்ரஸ்தாவிதவிதாக எழுதத்தொடங்கினார்கள். "ஆச்சான்பிள்ளையின் ஸ்வாதிநயநம் ஸ்ரீஸநாராயண அரணாநு என்பதுதான் = என்றே கொள்ளுவோம்; அப்போதும் இவர்களுடைய தூஷணங்களுக்கு அவகாசலேசமுமில்லையே" என்பதை நாம் நிஷ்கர்ஷித்துக்கொண்டு ப்ரதிபக்ஷிகளின் வாதங்களுக்கு விராமமுண்டாக்கினோம், இப்போது இவர்கள் செய்யவேண்டிய கார்யம் என்ன? 'ஸ்ரீஸநாராயண அரணாநு என்கிற வசநமே ஸ்வாதிநயநம்' என்று ப்ரமாணங்களைக்கொண்டு நிரூபிக்கவேண்டியதன்றோ கடைசியாக இவர்களுக்குக் கர்த்தவ்யமாய் வந்து விழுந்தது. "இன்ன இன்ன ப்ரமாணங்களின்படி ஸ்ரீஸநாராயண அரணாநு என்பது ஸ்வாதிநயநம்" என்று பத்தெட்டுவரியில் நிரூபித்துமுடித்து தம்மை வாய்மாளச் செய்திருக்கவேண்டுமே இவர்கள். அந்தோ! அது செய்யாமல் ஓர் விண்ணப்பமென்று நான்கு பக்கம் எதுக்கு எழுதுகிறார். கேட்ட கேள்விக்கு உத்தரமுரைக்க இயலாவிடில் வாளாகிடப்பதன்றோ அழகு.

விவாதாஸ்பதங்களான காரிகைகள் தேசிகனால் இயற்றப்பட்டவையல்ல என்றும் ப்ரக்ஷிப்தங்களென்றும் ஓர் புதிய கல்பனையை நாம் ஸதாசாரஸம்ப்ரோக்ஷையில் செய்ததாக இவர் எழுதுவதும் தவறு. மூன்று வருஷங்களுக்கு முன்பு நாம் வெளியிட்ட ரக்ஷாவிமோசநப்ரகாசிகையிலேயே (பக்கம்

13-ல்) அந்த வ்யாக்யாநமும் செய்திருக்கிறோம். அவ்வுரை நமது அபிப்ராயமாக எழுதிற்றன்று; வேதாந்த தீபிகாபத்ராதிபரான ஸ்ரீஉ.வே. ஸ்வாமி தேவநாயகாசார்ய ஸ்வாமி ஸ்ரீமுக மூலமாக நமக்கு உணர்த்தியிருந்ததை எடுத்துரைத்தோ மத்தனை. அதில் ஐகமத்ய ப்ரதிபத்தி நமக்குண்டு.

ஆசிரியர்காள்! பண்டிதரென்று பேர்கொண்டிருக்கிற உத்தமூரார் ஸ்வஸித்தாந்தவிஷய விமர்சனத்தில் மாத்திரம் தாம் கண்செலுத்தவேண்டியதை விட்டிட்டு எதுக்கு வீண்வம்பளப்புக்களிலே ப்ரவர்த்திக்கிறார்? அடியேனுடைய ஸ்ரீ ஸூக்திகள் எங்கேயாவது கெட்டுப்போகட்டும்; வ்யாக்யாநவ்ருத்திகளை எழுதுவதே அடியேனுடைய தொழிலாக இருக்கட்டும்; ப்ரதாநமாக நோக்கவேண்டிய விஷயமிராதோ! ஆச்சான் பிள்ளையின் ஸ்வாபதேசம் பிசகுதலென்பதையும், தமிழ்மொழி மர்மங்களை தேசிகன் ஸாதித்ததும் தூப்ராவபதிநபராக ஸ்வாமி ஸ்வாமிதிநிகாபூர் ஸாதித்தது ஸந்தேஹதூஷிதரான் என்பதையும் நிரூபிக்கவேண்டியதென்றோ இவருடைய கடமை. அந்தக்கடமையைச் செலுத்தியருளவேணுமென்றும் வீண்வம்பளப்புக்களில் ப்ரவேசம் செய்யலாகாதென்றும் நாம் ஸித்தாஞ்ஜநத்தில் பன்முறையும் ப்ரார்த்தித்திருந்தும் இவர் தமது கடமையில் நின்றும் நழுவி ப்ரகரணத்துக்குள் செய்யப்புகுப்பட்டதைக்கொண்டே விஷயத்தின் போக்கைப் ப்ராமாணிகர்கள் நிஷ்கர்ஷித்துக்கொள்ளலாமன்றோ.

ஸ்ரீ ஜைனேந்த்ரவ்யாகரணத்தின் உதாஹரணங்களான காரிகைகளைச் சில பாமை களிக்கள் கதவடைத்துக்கொண்டு சில பண்டிதர்களின் காதிலே ஓதலாமே யன்றிப் பண்டிதகோஷ்டிகளில் இனி வாய்திறக்க வழியில்லை என்னும்படி நாம் செவ்வனே செய்து முடித்திருக்க, அந்தோ! இவரது விண்ணப்பம் மண் ணப்பமே.

ஸாராஸ்வாதிநியைப்பற்றிப் பிறகு விசாரிப்போமென்கிறார். வஸ்துஸ்வபாவ மாணவும் அதில் வாய்திறக்க வழியில்லையென்பது ப்ரத்யக்ஷஸித்தமே. "ஸாராஸ் வாதிநி எப்படியாவது போகட்டும்; ஸ்ரீவைஷ்ணவ ஸ்வாமிகளுடைய மாத்திரம் வைத்துக்கொண்டு பேசுவோமே" என்று வந்தாலும் நமக்கு இஷ்டமே. அப்படி யும் வருமட்டாமல் பரழ்ங்கினது தமது புதுக்கவர்களுக்கு நாம் என்ன சொல்லுவது?

இந்த ப்ரதிபக்ஷிகளுக்கு ப்ரதிவாதம் பண்ணுவோமென் ஆசாமல் நாம் அநேகர் களை வேண்டிக்கொள்ளுகிறோம்; அதை இவர் உத்தமூரார்க்கு எப்படியோ தெரி ந்து விட்டதாம். இதை இவர் பெருங்குற்றமாக எழுதுகிறார். நமக்கு தெரிந்த முன்னாளு நாள் தொடங்கி ஸூக்திஸுதைக்களை பலபண்டிதர்களையும் நாம் வேண்டிக்கொள்வது வாஸ்தவம். "உபயாரஸ்வசாவி ஸஹ்யமா:" என்றுமுழா மேல்லே ஒரு படிப்புமில்லாத ப்ராரப்த பண்டிதப்ராக்ருதிகளுக்கு க்ரந்தமெழு தப்புறப்பட்டிருக்கிறார்களோ, நல்ல ஸஹித்ருதயராயிருக்கின்ற நீங்கள் தர்சநாப

காரமாகச் சில க்ரந்தங்களை இயற்றலாகாதா என்று ஸஹ்ருதயர் பலரை நாம் வேண்டிக் கொள்வது மெய்யே. ஆனால் அவர்கள் என்ன பதில் அருளுகிறார்க ளென்றால், "கலையறக்கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோதான்" என்னப்பட்ட வற்றுக்குத் தோள்தீண்டிகளான சுவடிகளை நாம்பாரோம்; அவற்றையெல்லாம் நீயே பார்த்துக்கொண்டு நீயே புகழ்ந்து மிகழ்ந்தும் போதுபோக்கிவா" என்றே அருளிச்செய்கிறார்கள்.

நாம் ஸ்வகீயபுத்தியாலன்றிக்கே பரோபதேசங்கொண்டே க்ரந்தங்கள் எழுதுவதாகவும் இவர் ப்ரஸித்தப்படுத்துக. இதெல்லாம் நமது க்ரந்தங்களுக்கு உத்கர்ஷாவஹங்களத்தனை போக்கி வேறல்ல.

"இவர் யார்மூலமாக எப்படி இவ்விஷயமறிந்தாரோ அதெல்லாம் நமக்கு முன்னமே தெரியும்" என்றெழுதுகிறார். நாம் ஸர்வஜ்ஞராக ஜனிக்க வில்லை. "நாண்பெரியோமல்லோம் நாம் நன்றுந் தீதும் நமக்குரைப்பாருள ரென்று நாடுவோமே" என்று தேசிகன் பணித்த கணக்கிலே பல மஹான்களிட மிருந்து பலவிஷயங்களையும் ஸமாசாரமாத்ரமாக வறிப்போமாகில் யாது பிழை? நாம் மயர்வற மதிநலமருளப் பெற்றோமென்று சொல்லிக்கொண்டோமா? நினைத்துக்கொண்டோமா? உத்தமூரார்க்கு மேல்விஷயமொன்றும் தோன்றாமற் போகவே இவையெல்லாம் விஷயமாயினபோலும். நாம் ஸித்தாஞ்ஜநமெழுதி வெளியிட்டபின் மதுரை ஸதஸ்ஸுக்குச் செல்லநேர்ந்தது. அப்போது வழி யிடையில் சிதம்பரத்தில், மஹாமஹோபாத்யாய, ப்ரஹ்மஸ்ரீ. த்ருணவாணிதீக்ஷி தரவர்களையும் மற்றும் பலவித்வான்களையும் ஸந்தித்தோம். ஏற்கனவே அவர் களுக்கு ஸித்தாஞ்சனம் கிடைத்திருந்தபடியால் தத்விஷயஸம்பாஷணைகளும் செய்ய ப்ராப்தமாயிற்று. ஸ்ரீமந்நாராயண சரணௌ என்கிற ஆபாதநத்தைப் பழிக்க அதுசிதவசனாவஷ்டம்பத்ரவர்களாலுமாகாது என்றே பலரும் பேசி னர். இப்படி நாம் ஆங்காங்கு அபிநந்திக்கிறோமென்பதற்காக இவர் வருந்திப் பயனென்? விஷய ப்ரஸ்தாநம் கடைசியாக எதிலே வந்து முடிந்ததென்று பாருங்கள்.

விதண்டைகிரஹஸஹஸ்ரஸங்க நாகளஸ்தம் நமக்குள்ளதாக இவர் எழுது கிறார். நாம் எழுதியுள்ள க்ரந்தங்களில் [ப்ரஸ்ரவணிதர், ஸிம்ஹஸாரஸுத்ர வேதீ, ஸிம்ஹஸாரஸ்ய விஸ்தாரஸிரூபம், ஸாமான்யஸாமான்யதோஷமொன: ப்ராஞ ப்ராஞ்சிநுபத்து வாமஷ்டிஸாஹமைமை ஹேதுஷீஷாஹாவஸ்யப்ரஹ!] உதாஹ்ருதிகளான வாக்குக்களில் எதைப்பற்றி இவர் விதண்டைகிரஹ வணசந மென்கிறார் என்பது தெரியவர்தால் ப்ராமாணிகர்களைக்கொண்டு ஒவ்வொன்றையும் நிரூபித்துக் காட்டலாம். ஸித்தாஞ்சனத்தில் (பக்கம் 23-ல்) இவரைப்பற்றின வரலாறு ஒன்று எழுதப்பட்டுளது; அதைப் பொய்யென்கிறாரா? ஸஹ்ருதஸம் வசனவாக்ய விஷயம் ஸுப்ரஸித்தமல்லவா?

தேசிகஹ்ருதய வ்யக்திவிசேஷங்களுக்குள்ள பாணஸீதிகம் நாம் செய்திருப்பது இவர்க்கு தூஷணமாகத் தோன்றினால் தோன்றுக. நம்மைப் பிறர் தூஷிப்பதும் பிறரைநாம் தூஷிப்பதும் ஸஹஜமேயாயிற்று. ஸ்தாபநபஸவிஷய விசாரங்களினால் ஸத்வசோதனம் செய்வது ஸஹ்ருதயலக்ஷணமன்று. திருப்பதியில் ஸர்வஸ்வதந்த்ர வித்வச்சிரோமணியாக எழுந்தருளியிருந்தவரும், உவே. கபிஸ்தலம் ஸ்வாமிக்கு ஆசார்யரும், ஸகலசாஸ்த்ர ஹஸ்தியென்று தேசமெங்கும் புகழ் பெற்றிருந்தவருமான ஸ்ரீமதுபயவே. புரிசை ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமியை அவலீலையாக தூஷித்து எழுதி வெளியிட்டிருக்கின்ற இந்த உத்தமூரர் ஸத்ஸம்ப்ரதாயஸ்தர்களைப்பற்றிப் பேசத் தகுதியுடையவரோ? முன்னே தூஷிக்க ஆரம்பித்தவர்யார் என்றும், யாருடையதூஷணம் அதிகம் என்றும் உதந்தாதிவிசாரங்களில் சென்று நிஷ்கர்ஷிப்பதா நமக்குப்பணி?

எடுத்த விஷயம் என்ன? அதற்கு என்ன உத்தரம்? என்னுமிவ்வளவே நாம் பார்ப்பது. இவருடைய விண்ணப்பம் நான்கு பக்கங்களினாலும் தேறின விஷயம் என்னவென்றால், "நம்முடைய ஸித்தாஞ்ஜநத்தின்மீது உத்தரமுரைக்க இவர்க்கு விஷயமில்லை" என்பதே கல்வெட்டாகத் தேறுகின்றது. அதில் (பக்கம் 12-ல்) நாம் வெளியிட்டிருக்கும் ப்ரஸ்நபத்ரிகைக்கு வேறு எந்த மஹானாவது ஸௌஜந்யத்துடன் மிக்க சுருக்கமாகவே விடையிறுத்தால் போதுமே.

ஸம்ப்ரக்ஷிணீபத்ராயிவர் ஜ்ஞாநவயோவ்ருத்தராயிருந்தும் ஒவ்வொரு விஷயத்திலும் வழியை விட்டுவிலகியே செல்லுகின்றார். மார்கழி மாதத்து ஸஞ்சிகையின் ரக்ஷாபத்ரத்தில் அவர் எழுதியுள்ள விஜ்ஞாபனத்தைப்பாருங்கள். "சுதீர்த்தாந்த நிஜாக்ஷயோ:" என்ற ஸ்ரீபாஷ்யஸூக்தியில் தகாரம் வீணென்று நாம் ப்ரமித்திருக்கிறோமாம். நம்முடைய வாக்குபலம் எம்பெருமானையும் பீடிக்கப்பார்க்கிறதாம். இவ்வளவு ஆக்ரஹங்கொண்டு இவர் எழுத என்ன ப்ரஸக்தியென்று பாருங்கள். ஸப்தஶ்லோகியில் தகாரங்கள் வீணாக விழுந்திருக்கின்றனவென்றும், அதனாலும் அந்த க்ரந்தம் பட்டர் ஸாதித்ததன்று என்றும் உத்தமூரர் ப்ரஸ்தாவித்திருந்தார். அதற்கு நாம் பதில் எழுதிவருமிடத்து, (ஸித்தாஞ்ஜநம், பக்கம் 32-ல்) "ஸ்ரீபாஷ்யத்தில் சுதீர்த்தாந்த நிஜாக்ஷயோ: என்றதையும் தூஷிப்பவர்களே இவர்கள்" என்று எழுதினோம். இங்கே நமக்கு என்ன ப்ரமம் சொல்ல இடமுளது? தகாரம் வ்யர்த்தமென்று நாமா தூஷித்தோம்?

ப்ரஸ்தாநவிஷயம் எது விசாரத்திற்கொண்டதோ, அது மூலையிலடங்கிப் போய் வீணான சில்லரை விஷயங்களைக்கிளப்பி வம்புப்போது கழிக்க நினைப்பவர்கட்கு நாம் அவகாசப்ரதாநம்பண்ணமாட்டோம்.

ஸம்ப்ரக்ஷிணியில் ரக்ஷாவிசேஷமென்றொரு நூல் க்ஷணஶ: க்ஷணஶ: வெளிவந்து கொண்டிருப்பதையும் கண்டுவருகிறோம். நம்முடைய க்ரந்தங்களை ஸூக்ஷ்ம

அம்சம் கடாக்ஷித்த மஹான்கள் அதனால் நிலைகலங்கார்கள். தேசிகனுக்குத் திருவுள்ளமல்லாத விஷயங்களையெல்லாம் அவருடைய திருவுள்ளமாக இவர்கள் ஸாதிக்கப்பெரும்பாடுகள்படுவது வீண் வீண் வீண். அதஶ்ஶ்லோகீஹ்ருதயத்தில் நிர்ணயித்தருளினார் என்றும், ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் அநுக்ரஹித்தருளினார் என்றும் இவர்கள் ஏதோ எழுதிவருவதெல்லாம் காருண்யமாத்ரோபாதிதம் ப்ரஸ்தம் ஸவஸாரீ உபதிஷ்டம் ஸ்வாத்மஸமர்ப்பணநாஸிதமத்தனையே. "ஸஹஸ்ஸோப்தெதஸ்ய ஸகேஷஸ்ய ஸ்ரீதேஷஸ்ஸ: ப்ரமாணவாந்" என்பதே சதுச்ச்லோகீபாஷ்ய நிகமநத்தில் நிஷ்கர்ஷித்தது. ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் மூலத்தில் ஸ்வாமிஸாதித்ததும், வியாக்கியானத்தில் ஸ்ரீமத் திருப்புட்குழி ஸ்வாமி நிஷ்கர்ஷித்ததுமெல்லாம் நமது நூல்களில் பரக்க ப்ரபஞ்சிதம். மேல்விஷயங்கள் சொல்லி மகிழ்விக்கவேண்டியிருக்க அதைவிட்டு, நாம் பூர்வபக்ஷகோடியில் எடுத்துக்காட்டின விஷயங்களையே ஸித்தாந்த கோடியில் எழுதி ப்ரஸித்தமாக்கி வெளியிடுவோர்க்கு என்ன ஸூக்தாநநமோ?

மேலும், இந்த விஷயங்களில் நமக்குக் கண்ணோட்டம் சிறிதுமில்லை. பிராட்டிக்கு உபாயத்வமுண்டு என்று ஸ்தாபித்துப் பதினாயிரம் சுவடிகள் இவர்கள் எழுதிக்கொள்ளட்டும். பிராட்டிக்கு எல்லைகடந்த உத்கர்ஷத்தையே உரைக்கிறார்களென்று நாமும் போர உகந்திடுவோம்.

"அஶேஷஜகதாம் ஸர்கோபஸர்கஸ்திதீ: ஸ்வர்கம் துர்கதிமாபவர்கிகபதம் ஸர்வஞ்ச குர்வந்ஹரி:। யஸ்யாவீக்ஷ்ய முகம் ததிங்கிதபராதீநோ விதத்தேகிலம்" என்றருளிச் செய்த ஆழ்வானுடைய புத்திக்கும் எட்டாதவிஷயங்கள் இவர்களுடைய மேதைக்குப் புலப்பட்டனவென்று கொண்டும் மகிழ்ந்திடுவோம். "எம்பெருமானுக்குக்கூட உபாயத்வமில்லை, பிராட்டிக்கேதான் அது உள்ளது" என்றும் முழுமனமாக இசைந்திடுவோம். இதற்காக ப்ரதிபக்ஷிகள் சிறிதும் முயற்சி கொள்ளவேண்டா.

"பிராட்டிக்கு உபாயத்வத்தை நன்கு ஸ்தாபித்து நாம் வலிதாக எழுதியுள்ள விஷயங்களை மறுப்பதற்கு சக்தியில்லாமல்போகவே அதில் தமக்குக் கண்ணோட்டமில்லையாக இவர் எழுதத்தொடங்கி விட்டார்" என்று ப்ரதிபக்ஷிகள் கோஷிக்கப் புறப்பட்டாலும் நமக்கு ஸந்தோஷமே. "ஆடத்தெரியாதாவளி கூடம் கோணலென்றாள்" என்ற பழமொழியின்படி, "க்ரந்தஜ்ஞைரபஹாஸ்யம் தத்" என்ற வார்த்தையை ஸ்தாபித்துக்கொள்ள முகமில்லாதவிவர்கள், 'நாம் முன்னே ஒன்று சொன்னதாகவும் பின்னே ஒன்று சொல்வதாகவும்' இந்த அநாவச்யக வார்த்தைகளை விரித்துக்கொண்டு வேறுவழிகளில் நுழைந்தோடுவது தங்களுக்கே தகுதி.

விச்வேதேவ பதவிஷயத்தில் ஸ்வாமிதேசிகனுடைய திருவுள்ளத்தைத் தெரிந்துகொள்ளாமல் தோழப்பர் தூஷித்தது எப்படி பரிஹாஸ்யமோ, அப்படியே ஆச்சான் பிள்ளையின் ஆபாதவிஷயத்திலும் உண்மையைத்தெரிந்

துகொள்ளாமல் தூஷித்தது பரிஹாஸ்யமே—என்கிறவிதுதான் நமது உபக்ரமமும் உபஸம்ஹாரமும். இதில் அணுமாத்திரமும் விபர்யயம் இல்லை.

நாம் விரும்பும் வாசும் ஒன்றே. ஆச்சான் பிள்ளையின் அருளிச் செயலில் ஸ்ரூநவெஜூரவஹாவஸ்யக்ஷவும் எப்படி? இவ்வொருவிஷயத்திற்கு பதில் தவிர வேறுயாதொன்றும் நாம் எதிர்பார்க்கின்றிலோம். இதற்காகவே நாம் ஸித்தாஞ்ஜனத்தில் வெளியிட்டுள்ள ப்ரச்ந பத்ரிகைக்கு பதில்கூறவே இவர்கள் கடமைப்பட்டவர்கள். *ஸுநூாவாஜொ விசுஹூஷ*

விவக்ஷித்வஅஸ்ரஹம் விஹாய விதயொக்திபி: ।
வதிஷ்காः வசயஜேந்த்ரஸ்ய நித்யஜெவ நஜொநஜ:॥

ஸ்ரீகாஞ்சீ அண்ணங்கராசாரியருடைய
தத்வநிவேதநம் முற்றிற்று.

வர்த்தமானங்கள்.

உலகளந்த பெருமாள் உத்ஸவம். காஞ்சீபுரத்தில் 'ஊரகம் நீரகம் காரகம் கார்வானம்' என்கிற நான்கு திவ்யதேசங்களடங்கியதும், உலகளந்த பெருமாள் ஸந்நிதி என்று ப்ரஸித்தமாக வழங்கப்படுவதுமான ஸந்நிதியில் உலகளந்த பெருமாளுக்கு ப்ரஹ்மோத்ஸவம் தைமீ 4வ முதல் செவ்வனே நடைபெற்றுப் புநர்வஸு நக்ஷத்திரத்தில் அவப்ருதமும் அழகாக நடந்தேறியது.

தி. வி. சிங்கராசாரியர்.

திருவல்லிக்கேணி. ஸ்ரீபார்த்தஸாரதி ஸன்னிதியில் அனேக மாதகாலமாக நடைபெற்றுவருகின்ற விமானத் திருப்பணி விஷயமும், அதற்காக ஒருவருஷ காலமாய் ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி பாலாலயத்தில் எழுந்தருளியிருக்கிற விஷயமும், இதுகாரணமாக அங்கு உத்ஸவங்களெல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன வென்பதும் அனைவருமறிந்ததே. திருப்பணிகைங்கரியம் ஸ்ரீமான் தர்மகர்த்தா ராவ்பஹதூர் V. ரங்கநாதம் செட்டியாரவர்களால் வெகு ஊக்கத்துடன் நிர்வஹிக்கப்பட்டுவருகிறது. நாளது பங்குனி மாதத்தில் ஸம்ப்ரோக்ஷணம் நடைபெறுமென்றும், சென்ற சித்திரை மாதத்தில் நடைபெறுது நின்றிருக்கும் ப்ரஹ்மோத்ஸவமும் உடனே நடைபெறுமென்றும் தெரியவருகிறது.

P. R. ஆராவமுதய்யங்கார்.

பேஜ் நெ. 9 to 16 காமகோடி பிரஸ், காஞ்சிபுரம்.

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி மூன்றும்பத்து.

நான்காந்திருவாய்மொழி-புகழுநல்லொருவன்.

(o)

அவதாரிகை:— கீழ்த்திருவாய்மொழியில் "ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்யவேண்டுநாம்" என்று எம்பெருமானுக்கு ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸகலவிதமான கைங்கர்யங்களையும் செய்யப்பெறவேணுமென்று மநோரதங்கொண்ட ஆழ்வாருடைய பாரிப்பைக் கண்ட எம்பெருமான் ஆழ்வார்க்குத்தான் அவர் விருப்பத்தின்படியே செய்வதற்கு அநுகூலமாக எல்லாப் பொருள்களிலும் பிரவேசித்து எங்கும் நிற்கின்ற நிலையைக் காட்டிக் கொடுத்தான். அதுகண்ட ஆழ்வார், பெருங்காற்றில் வீழ்ந்த பழங்களைப் பொறுக்கியெடுத்துக்கொள்ளக் கருதுமவர்கள் 'அந்தப் பழத்தை எடுப்போமா? இந்தப்பழத்தையெடுப்போமா?' என்று அலமந்து கிடப்பதுபோல, அத்தைச் சொல்லுவேனோ? இத்தைச் சொல்லுவேனோ? என்று அலமந்து, எங்கும் எல்லாவகைப்பொருளாயும் தோன்றுகின்ற அப்பெருமானுக்கு வாசிகமான கைங்கர்யத்தைச் செய்ய நினைத்து 'ஸகலகல்யாண குணங்களுக்கும் கடலான அவ்வெம்பெருமானுடைய தன்மையை யான் என்னவென்று சொல்லுவேன்?' என்று நிர்வேதத்துடனே அவனது ஸர்வாத்மத்வத்தைப்பேசுகிறார் இத்திருவாய்மொழியில்.

எம்பெருமானுக்குள்ள திருநாமங்களில் அநந்தன் என்பதும் ஒரு திருநாமம். 'அந்தமில்லாதவன்' என்பது அதன் பொருள். அந்தமாவது பரிச்சேதம். உலகில் ஒவ்வொரு வஸ்துவுக்கும் மூன்று வகையான பரிச்சேதங்கள் உண்டு; அவை—தேச பரிச்சேதம், கால பரிச்சேதம், வஸ்து பரிச்சேதம் எனப்படும். உலகில் காணப்படும் பொருள்கள் யாவும் இம்மூன்று வகைப்பட்ட பரிச்சேதங்களையுடையனவாகவேயிருக்கும். எந்தப்பொருளை யெடுத்துக்கொண்டாலும் 'இது இன்ன இடத்திலுள்ளது, மற்றோரிடத்தில் இல்லை' என்றும், 'இது இன்ன காலத்திலுள்ளது, மற்றொருகாலத்திலில்லை' என்றும், 'இது இன்ன வஸ்துவாகவுள்ளது, மற்றொரு வஸ்துவாக இல்லை' என்றும் சொல்லக்கூடியதாகவே யிருக்குமாதலால் (எம்பெருமான் தவிர) ஸகல பதார்த்தங்களும் த்ரிவித பரிச்சேத ஸஹிதங்களாகவே யிருக்கும்; எம்பெருமானொருவனே த்ரிவித பரிச்சேதரஹிதனாயிருப்பன். எங்குமுள்ளவனாய் எப்போதுமுள்ளவனாய் எல்லாப்பொருள்க

னும் தானுயுள்ளவனுப் இருக்கையாலே இது பற்றியே அனந்தன் என்னப்படுகிறான். இவற்றுள் ஒன்றான வஸ்துபரிச்சேத ராஹித்யம் நம்முடைய விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு மிகவும் உள்ளீடாயிருப்பது. ஏனென்னில்; சரீராத்ம பாவத்தைக்கொண்டே இந்த வஸ்துபரிச்சேதராஹித்யத்தை நிர்வஹிக்கவேண்டும். சரீரங்களைச்சொல்லும்படியான சப்தங்கள் சரீரியளவும் செல்லக்கடவனவாதலால், எம்பெருமான் எல்லாப்பொருள்களுக்கும் அந்தர்யாமியாதலால் எந்த வஸ்துவைச்சொல்லுகிற சப்தமும் எம்பெருமானளவுஞ்சென்று பர்யவஸிக்குமென்பது வேதாந்த ஸித்தாந்தம். இதனை ஆழ்வார் முந்துறமுன்னமே “உடன்மிசை உயிரெனக்கரந்தெங்கும் பரந்துளன்” என்று சுருக்கமாகக் காட்டியருளினார். அது தன்னையே இத்திருவாய்மொழியில் விஸ்தரித்து அருளிச்செய்கிறார் என்றுணர்க. .... *

புகழுநல்லொருவனென்கோ பொருவில்சீர்ப்பூமியென்கோ*
திகழுந்தண்பரவையென்கோ தீயென்கோவாயுவென்கோ*
நீகழுமாகாசமென்கோ நீள்சுடரிரண்டுமென்கோ*
இகழ்விலிவ்வனைத்துமென்கோ கண்ணனைக்கூவுமாறே. (க)

கண்ணனை	(உலகத்து எல்லாப் பொருள்களையும் தனக்குச் சரீரமாகவுடைய) எம்பெருமானை	தீ என்கோ	அக்கினியென்பேனே?
		வாயு என்கோ	காற்று என்பேனே?
புகழும்	(வேதங்கள் இதிஹாஸ புராணங்கள் முதலியவற்றால்) புகழ்ந்து கூறப்பெற்ற	நிகழும் ஆகாசம் என்கோ	எங்குமுள்ளதான ஆகாசமென்பேனே?
நல்	விலக்ஷணமான குணங்கள் முதலியவற்றையுடைய	நீள் சுடர் இரண்டும் என்கோ	மிக்க வொளியையுடைய (ஸூர்யன் சந்திரன்) என்ற இரண்டு சுடர்களுமென்பேனே?
ஒருவன்	ஒப்பற்றவன்		
என்கோ	என்று சொல்வேனே?	இகழ்வு இல்	இகழப்படுதலில்லாத [வேண்டும் பொருள்களாகக் கைக்கொள்ளுதற்கு உரிய]
பொருவு இல் சீர்	ஒப்பில்லாத சிறப்புக்களையுடைய		
பூமி என்கோ	பூமியென்று சொல்வேனே?	இவ் அனைத்தும் என்கோ	இவையெல்லாப் பொருள்களு மென்பேனே?
திகழும்	விளங்குகிற		
தண்	குளிர்ச்சியான	கூவும் ஆறு ஏ	(எம்பெருமானைச்) சொல்லியழைக்கும் விதம் (எங்ஙனே) [யான் இன்னதென்று உணரேன் என்றபடி].
பரவை என்கோ	நீர்நிலையென்று சொல்வேனே?		

* * * [புகழுநல்லொருவன்.] எம்பெருமான் ப்ரபஞ்சஸ்ருஷ்டிக்குக் காரணமான பஞ்சமஹாபூதங்களையும், அந்தப்பூதங்களினால் இயன்ற பொருள்களையும் தனக்குச்சரீரமாகக் கொண்டு விலக்ஷணமான குணங்களோடு ஆழ்வார்க்கு

ஸேவைதந்தருளியதனால், அத்தகைய நிலைமையை ஸேவிக்கப்பெற்ற ஆழ்வார் அப்பெருமானை இப்படிப்பட்ட தன்மையையுடையவனென்று கூறுதற்கு இயலாமல் திகைத்து நிற்கின்றார். “கண்ணனைக் கூவுமாறே” என்று, முடிக்குஞ்சொல் இன்றி விட்டிருக்கிறார்; அதனை வருவித்து உரைத்துக்கொள்க. விதமென்றபொருளையுணர்த்துகின்ற ஆறு என்ற சொல் வருமிடங்களில் முடிக்குஞ்சொல் கூறப்படாது எஞ்சிநிற்பதை இலக்கியங்களிற் காணலாம்: இது இசையெச்சம்.

புகழும் நல்லொருவன்=வேதம் முதலியவற்றால் புகழப்பெற்றும், சேதநாசேதனங்களைக்காட்டிலும்பரமவிலக்ஷணனாகியும் தோன்றும்ஒப்பற்ற எம்பெருமான் என்றபடி. என்கோ என்பதை என்கு ஓ என்று பிரிக்க. ‘என்’ என்னும் பகுதியினடியாய்பிறந்த தன்மையொருமை எதிர்காலவினைமுற்று ‘என்கு’ என்பது. இதில் ‘கு’ விகுதி காலத்தையும் இடத்தையும் காட்டும். [நன்னூல்-பதவியலில் பதினெட்டாவது சூத்திரமும் வினையியலில் பன்னிரண்டாவது சூத்திரமும் காண்க]. என்கோ என்பவற்றிலுள்ள ஓகாரங்கள் ஸந்தேஹப்பொருளில் வந்தவை.

ப்ருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் என்கிற பஞ்சபூதங்களையும் இப்பாட்டில் உத்பத்திக்ரமமெனக் கூறாமல் மஹாப்ரளய காலத்தில் லயிக்கும் முறைப்படி கூறியுள்ளார். “தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶஸ்ஸம்பூத: ஆகாஶாத்வாயு:” இத்யாதி உபநிஷத்வாக்யங்களினால் உத்பத்திக்ரமம் அறியத்தக்கது. “ப்ருதிவ்யப்ஸு ப்ரலீயதே ஆபஸ்தேஜஸி லீயந்தே.” இத்யாதி உபநிஷத் வாக்யங்களினால் அவற்றின் லயக்ரமம் அறியத்தக்கது. பொறுமை முதலிய குணங்களையுடைய பூமியாகவும், அந்தப் பூமியைக்கொண்டு காரியங்கொள்ளும்போது அதனுடைய கடினத்தன்மையை நெகிழ்த்துக் கொள்ளுதற்கு உரிய ஜலமாகவும், அந்த ஜலம் நிறைந்து நெகிழ்ச்சி மிகுந்தால் அந்த நெகிழ்ச்சியை நீக்கி வலிக்கப்பண்ணித்தரும் அக்கியாகவும், அந்த அக்கி மிகவும் உறைதலால் அதனைத் தணித்தற்கு உரிய காற்றாகவும், இந்த நான்கு பூதங்களும் தங்குவதற்கு இடத்தைத் தருகின்ற ஆகாசமாகவும் இவ்வாறு லோக ஸ்ருஷ்டிக்குக் காரணமான இந்த ஐம்பெரும் பூதங்களையும் எம்பெருமான் தனக்குச் சரீரமாகக் கொண்டு நிற்கும் வகையை முதலிற் கூறினர்—“பொருவில்சீர்ப்பூமியென்கோ” என்று தொடங்கி “ஆகாசமென்கோ” என்னுமளவாக.

“நீள்சுடரிரண்டுமென்கோ” என்று ஸூர்ய சந்திரர்களைக் கூறியது—பஞ்சபூதங்களினாலாகிய மற்றை உலகத்துப் பொருள்கட்கெல்லாம் உபலக்ஷணம். இங்குக் கூறிய பூமி முதலிய பொருள்கள்யாவும் நாட்டிலுள்ளார்க்குத் தோன்றுவதுபோல் வெறும் பொருள்மாத்திரமாகத் தோன்றாது எம்பெருமான் வடிவமாகவே இவ்வாழ்வார்க்குத் தோன்றுகின்றதனால் ஒன்றையும் ஹேயமாகக்

கொள்ளாமல் ததீயஸ்வாகாரத்தாலே அனைத்தையும் உபாதேயமாகவே ஆழ்வார் கொண்டார் என்பது "இகழ்வு இல் இவ்வனைத்து மென்கோ" என்பதனால் பெறப்படும். ஆசார்யஹ்ருதயத்தில் (இரண்டாம் பிரகரணத்தின் முடிவான சூர்ணையில்) "ததீய மென்னில் விட்டகலவும் ததீய மென்னில் இகழ்வு அறவும்" என்றருளிச்செய்திருப்பது இங்கு நினைக்கத்தக்கது.

"வஹீநாம் ஹுதிः" என்ற புருஷஸூக்தத்தின்படி பூமியானது எம்பெருமானது திருவடிகளில் தோன்றிய சிறப்பையுடையதும், பொறுமை முதலியவற்றையுடையது மாதலால் "பொருவில் சீர்ப் பூமி" என்றும், ஜலமானது பூமியின் வன்மையை நெகிழ்த்தித்தரும் தன்மையையுடையதாதலால் "திகழும் பரவை" என்றும், ஆகாசமானது மற்ற நான்கு பூதங்களும் தன்பக்கல் ஒடுங்குமளவும் தான் அழியாது நிற்றலாலும், மற்றைப் பூதங்கட்கு முன்னே தோன்றி அவைதன்னிடத்துத் தங்கும்படி தான் இடங்கொடுத்தலாலும் "திகழும் ஆகாசம்" என்றும் கூறினர் என்றும் விசேஷார்த்த மருளிச்செய்வர். ... (க)

கூவுமாறறியமாட்டேன் குன்றங்களனைத்துமென்கோ*
மேவுசீர்மாரியென்கோ விளங்குதாரகைகளென்கோ*
நாவியல்கலைகளென்கோ ஞானநல்லாவியென்கோ*
பாவுசீர்க்கண்ணனெம்மான் பங்கயக்கண்ணனையே. (உ)

பாவு சீர் கண்ணன்	பரம்பின திருக்கல்யாண குணங்களையுடைய க்ருஷ்ணனென்ற திருநாமமுடையவனும்	விளங்கு தாரகைகள் என்கோ	பிரகாசிக்கின்ற நக்ஷத்திரங்களென்பேனோ?
பங்கயம் கண்ணன்	செந்தாமரை மலர் போன்ற திருக்கண்களையுடையவனும்	நா இயல் கலைகள் என்கோ	நாவினால் முயற்சியோடு உச்சரிக்கப்படுகின்ற கல்விகளென்பேனோ?
எம்மானை	எமது தலைவனுமாகிய எம்பெருமானை	ஞானம் நல் ஆவி என்கோ	அர்த்த ஞானத்திற்குக் காரணமான நல்ல சப்தங்கள் என்பேனோ?
குன்றங்கள் அனைத்தும் என்கோ	மலைகள் எல்லாமும் என்று சொல்வேனோ?	கூவும் ஆறு	(எம்பெருமானைச்) சொல்லும் விதத்தை
மேவு சீர் மாரி என்கோ	(கண்டார்) விரும்பும்படியான சிறப்பையுடைய மழை யென்பேனோ?	அறிய மாட்டேன்	அறிகின்றேனில்லை.

* * * [கூவுமாறு.] கீழ்ப்பாசுரத்திற் கூறிய பஞ்சபூதங்களின் காரியப்பொருளாக எம்பெருமானை இந்தப்பாசுரத்தில் ஆழ்வார் அநுபவிக்கிறார். குன்றங்கள் முதலியவை எம்பெருமான் வடிவமாகவே ஆழ்வார்க்குத் தோற்றுதலால் "பங்கயக் கண்ணன்" என்றதனோடு "குன்றங்களனைத்தும்" என்பன முதலியவற்றோடு வாசியில்லாமல் இவர் ஈடுபடுகின்றனரென்க. குன்றம்—பூமிதத்துவத்தின் காரியம். "பூமியினுடைய காடிந்யம் ஓரிடத்திலே திரண்டாற்போலேயாய்ப் பூமிக்கு

ஆதாரமாயிருக்கிற பர்வதங்களென்பேனோ?" என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி. மாரி—ஜலதத்துவத்தின் காரியம். உலகமும் அதற்கு உறுதியாகிய அறம் பொருள் இன்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய சிறப்பையும், வடிவழகினாலுங் குளிர்ச்சியினாலும் கண்டாரெல்லாராலும் விரும்பப்படுந்தன்மையையும், எம்பெருமானது திருமேனிக்குப் போலியாகும் மேம்பாட்டையும் பெற்றிருத்தலால் "மேவுசீர் மாரி" என்றார். தாரகைகள் — அக்நிதத்துவத்தின்காரியம். ஒளியுள்ள பொருள்களெல்லாம் அக்நிதத்துவத்தின் காரியமென்பது நூல்துணிபு. கலைகள்—வாயுதத்வத்தின் காரியம். சப்தங்கள் ஆகாசத்தின் குணமெனப்படுமாயினும் அவை செவிப்புலனாகுந்தன்மை வாயுவின் உதவியினாலேயே ஆகவேண்டியிருத்தலால் கலைகள் வாயுவின் காரியமாகும். உயிரின் முயற்சியினால் தோன்றும் வாயுவே முயற்சியின் வேறுபாட்டால் வெவ்வேறெழுத்துக்களாக நாவினால் உச்சரிக்கப்பட, அவ்வெழுத்துகள் பதங்களாகவும் அந்தப் பதங்கள் வாக்கியங்களாகவும் அவ்வாக்கியங்கள் சாஸ்த்ரங்களாகவும் என இவ்வாறு நாவினால் தோன்றுகின்ற எழுத்துக்களே சாஸ்த்ரங்களாகின்றனவாதலால் 'நாவியல் கலைகள்' எனப்பட்டது. ஞான நல்லாவி—ஆகாசதத்துவத்தின் காரியம். ஞானமாவது பொருள்களை உள்ளபடி அறிதல்; ஆவி என்னும் உயிரின் பெயர் ஆகுபெயராய் உடலைக் குறித்து நிற்கும். ஆகவே 'ஞான நல்லாவி' என்பதற்கு 'அறிவுக்கு உடலான ஓசைவிசேஷங்கள்' என்று பொருள் கொள்ளவேண்டியதாயிற்று. உடலுக்குள் உயிர் தங்கி நிற்றல் போலச் சப்தங்களில் அர்த்த ஞானம் தங்கி நிற்றலால் ஞானத்துக்குச் சப்தங்கள் உடலாகும். "பல்வகைத் தாதுவினுயிர்க்கு உடல்போல், பல சொல்லால் பொருட்கு இடனாக..செய்வன செய்யுள்" என்றது இங்குக்காணத்தக்கது.

"ஆவியென்று லக்ஷணையாலே சரீரத்தைச் சொல்லுகிறது. ஞானத்துக்கு சரீரமென்று ஜ்ஞாநஸாதகமான சப்தத்தைச் சொல்லுகிறது" என்ற பன்னீராயிரப்படி காண்க.

ஆழ்வார் மயர்வற மதிநலமருளப்பெற்று எல்லாப்பொருள்களையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல நன்றாக உணர்ந்திருந்தும் "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்றபடி தாம் பக்தியினால் பரவசப்பட்டிருத்தலால் எம்பெருமானது தன்மையைப்பேச இயலாமல் "கூவுமாறு அறியமாட்டேன்" என்கிறார். இனி, எம்பெருமானது விபூதிகள் இவ்வளவென்று ஓரளவுபட்டிராமையால் அவற்றை முற்றவும் சொல்லமாட்டாது இங்ஙனம் கூறுகின்றாரெனினும் அமையும். .... (உ)

பங்கயக்கண்ணனென்கோ பவளச்சேவ்வாயனென்கோ*
அங்கதிரடியனென்கோ அஞ்சனவண்ணனென்கோ*
செங்கதிர்முடியனென்கோ திருமறுமார்வனென்கோ*
சங்குசக்கரத்தனென்கோ சாதிமாணிக்கத்தையே. (ங)

சாதி மாணிக்கத்தை	நல்ல சாதியான [ஆகரத்தில் தோன்றிய] கருமாணிக்கம் போல விளங்குகின்ற திருமேனியையுடைய திருமாலை	அஞ்சனம் வண்ணன் என்கோ	மைபோலுங் கருநிறத்தையுடையவனென்பேனோ?
பங்கயம் கண்ணன் என்கோ	செந்தாமரைக் கண்ணனென்பேனோ?	செம் கதிர் முடியன் என்கோ	சிவந்த ஒளியையுடைய கிரீடத்தையுடையனென்பேனோ?
பவளம் செம் வாயன் என்கோ	பவளம்போலச் சிவந்த வாயையுடையவன் என்பேனோ?	திரு மறு மார்வன் என்கோ	பிராட்டியையும் ஸ்ரீவத்ஸமென்னும் மறுவையுமுடைய திருமார்பையுடையவனென்பேனோ?
அம் கதிர் அடியன் என்கோ	அழகையும் ஒளியையுமுடைய திருவடிகளையுடையவனென்பேனோ?	சங்கு சக்கரத்தன் என்கோ	சங்க சக்கரங்களையுடையனென்பேனோ?

* * * [பங்கயக்கண்ணன்] எம்பெருமான் ப்ரபஞ்ச சரீரனாயிருக்கும்படியை முதலிரண்டு பாசுரங்களிற் கூறிய ஆழ்வார், இந்தப் பாசுரத்தில் தனக்கு உரிய திருமேனியோடு ஸேவைஸாதிக்கின்ற அப்பெருமானை அநுபவிக்கிறார். இவ்வாறு அநுபவித்துக் கூறியதற்குக்காரணம்—எம்பெருமான் ஜகத்தை சரீரமாகக் கொண்டுநிற்கும் நிலையும் தனக்கு உரிய திருமேனியைக் கைக்கொண்டு நிற்கும் நிலையும், இவ்விரண்டும் ஆழ்வார்க்கு ஒத்திருக்கையாலென்க.

ஆழ்வார், தம்மைக் கடாக்ஷித்துத் தம்மோடு முதலுறவு பண்ணின திருக்கண்களின் அழகிலீடுபட்டு முதலில் "பங்கயக் கண்ணன்" என்றார். அந்தக்கண்ணோக்குக்குத் தப்பினாலும் தப்பவொண்ணாத புன்முறுவலையுடைய வாயழகிலீடுபட்டுப் 'பவளச் செவ்வாயன்' என்றார். அந்த நோக்கத்திலும் புன்சிரிப்பிலும் ஈடுபட்டவர் தோற்றுவிழும் நிலமாகிய திருவடிகளிலீடுபட்டு "அங்கதிரடியன்" என்றார். அத்திருவடிகளில் வீழ்ந்தவர் அநுபவிக்கின்ற வடிவழகிலீடுபட்டு "அஞ்சனவண்ணன்" என்றார். அவ்வாறு அநுபவிக்கும் வடிவழகையுடையவன் ஈடும் எடுப்புமில்லாத ஈசன் என்பதை விளக்குகின்ற திருமுடியினழகிலீடுபட்டுச் "செங்கதிர்முடியன்" என்றார். திருமுடியினால் விளங்குகின்ற ஸ்வாமித்வத்தைக் கண்டு 'இப்பெரியோனை நாம் எவ்வாறு நெருங்குவது!' என்று கருதிப் பின் வாங்காதபடி எப்போதும் அப்பெருமானது திருமார்பிலேயிருந்து புருஷகாரஞ்செய்யும் தாயான பிராட்டியின் ஸம்பந்தத்தைக் கருதிக் "திருமறுமார்வன்" என்றார். பெருமானும் பிராட்டியுமான இச்சேர்த்திக்கு என்ன தீங்கு வருகிறதோவென்று பொங்கும் பரிவினால் பாபசங்கை கொள்ளுகின்ற அடியார்களுடைய அச்சத்தைத் தவிர்ப்பனவான திவ்யாயுதங்களைக் கருதி 'சங்கு சக்கரத்தன்' என்றார்.

"[சாதிமாணிக்கத்தை.] போலியன்றிக்கே ஆகரத்திலே பிறந்து நன்றான மாணிக்கம்போலே நிர்த்தோஷமாய் ஸ்வதஸ்ஸித்தமான வடிவழகுடையவனை" என்பது ஈடுமுப்பத்தாறாயிரம்.

மறு—ஸ்ரீவத்ஸமென்கிற மயிர்ச்சுழி. .... (௩)

சாதிமாணிக்கமென்கோ சவிகொள்பொன்முத்தமென்கோ*
சாதிநல்வயிரமென்கோ தவிவில்சீர்விளக்கமென்கோ*
ஆதியஞ்சோதியென்கோ ஆதியம்புருடனென்கோ*
ஆதுமில்காலத்தெந்தை அச்சுதனமலனையே. (௪)

ஆதும் இல் காலத்து	(என்னிடத்து) யாதொரு உபாயமுமில்லாத காலத்திலே	சாதி நல் வயிரம் என்கோ	சாதியில் தோன்றிய சிறந்த வஜ்ராத்னமென்பேனோ?
எந்தை	என்தந்தைபோலப் பாதுகாக்க ஒருப்பட்டவனும்	தவிவு இல் சீர் விளக்கம் என்கோ	அழிதலில்லாத ஒளியையுடைய விளக்கு என்பேனோ?
அச்சுதன்	(பின்பு ஒருகாலும் என்னை அந்த நிலையினின்று) நழுவவிடாதவனும்	ஆதி	எல்லாப்பொருள்கட்கும் முந்தியிருப்பதாய்
அமலனை	(அங்ஙனம் பாதுகாத்தலைத்) தன்பேறாகக் கொள்பவனுமான எம்பெருமானை	அம்	அழகியதான
		சோதி என்கோ	தேஜோமயமான திருமேனியையுடையவனென்பேனோ?
சாதி மாணிக்கம் என்கோ	———;	ஆதி	தலைவனாகிய
சவி கொள் பொன் என்கோ	ஒளியையுடைய பொன் என்பேனோ?	அம்	(ஆனந்தம் முதலிய குணங்களால்) இனியவனான
சவி கொள் முத்தம் என்கோ	நீரோட்டமுள்ள முத்து என்பேனோ?	புருடன் என்கோ	பரமபுருஷன் என்பேனோ?

* * * [சாதிமாணிக்கம்.] ஒருவன் எம்பெருமானை நினைப்பதற்கு எனக்கு ஒருபாயம் சொல்லவேணும் என்று ஒருபெரியோரைக்கேட்க, அதற்கு அவர் 'நான் உனக்கு அது சொல்லுகிறேன், நீ எனக்கு அவனை மறப்பதற்கு ஒருபாயம் சொல்லவல்லையோ?' என்றாராம். அதற்குக் கருத்து—உலகத்துப் பொருள்கள் யாவும் பெயரையும் உருவத்தையும் பெற்று வழங்கப்பெறுவது எம்பெருமான் அவ்வப்பொருள்களில் பிரவேசித்து நிற்பதனாலேயாதலால், ஏதேனும் ஒரு பதார்த்தம் தோற்றும்போதும் ஞானிகட்கு அவனை முன்னிட்டுக்கொண்டே தோற்றுமென்பது. இவ்வாறு எல்லாப்பொருள்களும் எம்பெருமானது ஸம்பந்தத்தைப் பெற்றிருந்தாலும் "[illegible]" [உலகத்திலே சிறந்து தோன்றும் பொருள்கள் யாவும் எனது தேஜஸ்ஸின் அம்சத்தினாலுண்டானவை]

என்று கீதையில் கண்ணபிரான் பாராட்டிக் கூறியிருத்தலால் சிறந்தமாணிக்கம் முதலியவைகளில் அவ்வெம்பெருமானது அம்சம்மிக்கிருக்குமென்பது கருதி ஆழ்வார் இந்தப்பாசுரத்தில் எம்பெருமானை மாணிக்கம்முதலிய சிறந்தபொருள்களாகப் பாராட்டியநுபவிக்கின்றனரென்க. ஆதியஞ்சோதி யென்பது முதல் எம்பெருமானை நேரே சொல்லுகின்றது.

மாணிக்கம்—நவமணிகளுள் ஒன்று. (நவமணிகளாவன—கோமேதகம் நீலம் பவளம் புட்பராகம் மரதகம் மாணிக்கம் முத்து வைடூரியம் வைரம் என்பன.) சாதிமாணிக்கம் என்றது—சிறந்த ஆகரத்திற் பிறந்ததும் குற்றமற்றதும் இயற்கையழகையுடையதும் பெருவிலையதுமான மாணிக்கம் என்றபடி. [சவிகொள் பொன்முத்தம் என்கோ] சவிகொள் பொன் என்கோ, சவிகொள் முத்தம் என்கோ என்று கூட்டுக. ச்சவி: என்னும் வடசொல் சவி யென்றாயிற்று. பொன்னுக்குச் சவி உயர்ந்த மாற்று. முத்தத்திற்குச் சவி நீரோட்டம்.

ஆதியஞ்சோதி என்பதற்கு—காரியப்பொருள்கட்கெல்லாம் தான் முந்தியதாய், என்றும் ஒருபடிப்பட்டதாய், ஸூர்யன் முதலிய சுடர்களெல்லாவற்றினும் விஞ்சிய ஒளியையுடையதான பரமபதம் என்றும் பொருள் கூறலாம். [அம் புருடன்.] புருஷனுக்கு அழகாவது—உலகத்து உயிர்களைப்போலக் கருமவசத்தினால் தோன்றி க்ஷணிகமாக நிற்கும் ஆனந்தம் முதலிய குணங்களையுடையவனாகாமல் இயற்கையாகவே எப்போதும் இருப்பனவான ஆனந்தம் முதலிய குணங்களுடையவனாதல்.

["ஆதுமில்காலத்து எந்தை அச்சுத னமலனையே.] எனக்குத் தன்னைப்பெறுகைக்கு முதலொன்றுமில்லாத காலத்திலே தான் எந்தையான முறையை எனக்கு அறிவித்து, பின்பு ஒருகாலமும் நழுவவிடாதே ரக்ஷித்து என்பக்கலிலே ஒரு ப்ரயோஜனங்கொண்டன்றிக்கே நிர்ஹேதுகமாகத் தன் பேறாக ரக்ஷித்தவனை" என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி. இனி, ஆதும் இல் காலத்து—எல்லாம் அழியும் ப்ரளயகாலத்திலே, எந்தை—எமது தந்தைபோல்பவனாய், அச்சுதன்—(எல்லாப்பொருள்களையும்) நழுவவிடாது (தன்பக்கல் ஏறிட்டுக்கொண்டு) பாதுகாப்பவனாய், அமலனை—(அவை தன்னிடத்திலிருந்தாலும் அவற்றின்) குற்றம் தன்னிடத்துச் சேரப்பெறாதவனான எம்பெருமானை என்றும் பொருளுரைப்பர். ஆசார்யஹ்ருதயத்தில்—"உறக்கம் தலைக்கொண்டபின்னை" இத்யாதியான (சகூ) சூர்ணையில் "ஆதுமில்காலத்தெந்தையான" என்றவிடத்திற்கு வியாக்கியானம் செய்தருளா நின்ற மணவாளமாமுனிகளும் இங்ஙனே பொருளருளிச் செய்துள்ளார். .... (ச)

அச்சுதனமலனென்கோ அடியவர்வினைகெடுக்கும்*
நச்சுமாமருந்தமென்கோ நலங்கடலமுதமென்கோ*
அச்சுவைக்கட்டியென்கோ அறுசுவையடிசிலென்கோ*
நெய்ச்சுவைத்தேறலென்கோகனி யென்கோபாலென்கேனே. (ரு)

(எம்பெருமானை)		நலம் கடல் அமுதம் என்கோ	நல்லபாற்கடலில் தோன்றிய அம்ருதமென்பேனோ?
அச்சுதன் என்கோ	அச்சுதன் என்பேனோ?	அ சுவை கட்டி என்கோ	அந்த அம்ருதத்தின் உருசியையுடைய கருப்புக் கட்டி யென்பேனோ?
அமலன் என்கோ	அகில ஹேய ப்ரத்யநீகன் என்பேனோ?		
அடியவர்	தன்னடியார்களது		
வினை	புண்ணியபாப மென்கிற இரு வினைகளையும்	அறு சுவை அடிசில் என்கோ	அறுவகைச் சுவையும் நிரம்பிய உணவு என்பேனோ?
கெடுக்கும்	போக்குவதும்		
நச்சு	(இனிமைபற்றி) விரும்பப்படுவதுமான	நெய் சுவை தேறல் என்கோ	நெய்போலுஞ் சுவையையுடைய தேன் என்பேனோ?
மா மருந்தம் என்கோ	சிறந்த ஔஷதமென்பேனோ?	கனி என்கோ	பழமென்பேனோ?
		பால் என்கேனே	பால் என்பேனோ?

* * * [அச்சுதனமலனென்கோ] எம்பெருமான் ரஸம் நிறைந்த பண்டங்களாக இருக்குந்தன்மையை ஆழ்வார் இப்பாட்டில் பாராட்டிக் கூறுகின்றார். "ஸர்வகந்தஸ் ஸர்வரஸ:" "ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி" என்ற உபநிஷத்து இங்கு ஸ்மரிக்கத்தக்கது.

புண்ணியமும் பாவமும் பிறப்பிற்கே ஹேதுவாகி உயிரைப் பந்தப்படுத்துவதில் பொன் விலங்கும் இரும்பு விலங்கும் போலத் தம்முள் ஒத்திருக்கின்றமையால் அவ்விருவகைவினையும் அடங்க "வினைகெடுக்கும்" என்று பொதுப்படக் கூறினர். எம்பெருமான் பரமபதத்தில் இருந்தானேயாகிலும் அடியவர் இடர்ப்பட்டமாத்திரத்தில அரைகுலையத் தலைகுலைய ஆனைக்கு அருள்செய்தாற்போல ஓடிவந்து அவர்கள் துன்பத்தைப்போக்குவானென்ற கருத்தும் அடியவர் வினை கெடுக்கும் என்ற விடத்தில் தோன்றும். உடற்பிணியைத்தீர்க்கும் மருந்தினும் உயிர்ப்பிணியாகிய வினையைத் தீர்க்கும் வேறுபாடு விளங்க 'வினைகெடுக்கும் மருந்தம்' என்றார். கைப்பு முதலிய அருசியையுடைய மருந்தினும் வேறுபாடு விளங்க 'நச்சுமருந்தம்' என்றார். மாமருந்தம் என்றது—காற்றுப்பட்ட மாத்திரத்தில் நோய்தீர்க்கவல்லதாய், ஏகரூபிகையாய், ஒருமுறையில்தானே பிணியைப்போக்கவல்லதாய், அபத்தியஞ்செய்தாலும் தீமையை உண்டாக்காததான மஹௌஷதம் என்றபடி. எம்பெருமான் பரம்பரையாகத் தன்னடியாரடியார் முதலியோர்க்கு அடியவரானாரையும் பாதுகாத்தலும், தன்னையடைந்தாரெதைவேண்டினாலும் தானேயளிப்பவனாதலும், தன்னை ஒருகால் சரணமடைந்தார்க்கும் அபயமளிப்பவனாதலும், தன்னடியவர் அபுத்தி பூர்வமாகச் செய்யும் பாவங்களையெல்லாம் க்ஷமிப்பவனாதலும் காண்க. மாமருந்தம் என்றவிடத்திற்கு வியாக்கியானமருளிச்செய்யுமிடத்து (ஈட்டில்) — "மேல்காற்றிலே காட்ட நோய்தீருமாயிருக்கை" என்றுளது. உலகில் வியாதிகளுக்கெல்லாம்

மேல் காற்றப்பட்டால் அபிவ்ருத்தியாகுமென்பர்; அதற்கு எதிர்த்தட்டாயிருக்கும் இந்த மாமருந்து என்ற கருத்தும் உணரத்தக்கது.

நலங்கடலமுதம் என்றவிடத்தில், கடல் என்பதை அமுதத்திற்கு இயற்கையடைமொழியாக்கி, கடலைக்கடையாமலே கிடைத்த சிறப்பையுடைய அமிருதம் என்று விசேஷப்பொருளுரைப்பர்.

அறுசுவை—கைப்பு தித்திப்பு புளிப்பு உவர்ப்பு துவர்ப்பு கார்ப்பு என்பவை. "நெய்ச்சுவைத்தேறல்" என்னுமிடத்தில், நெய்—மிருதுவான, சுவை—சுவையையுடைய, தேறல் என்றும், சுவை என்பதை நெய் தேறல் என்ற இரண்டிற்கும் அடைமொழியாக்கி, சுவையையுடைய நெய் யென்கோ? சுவையையுடைய தேறல் என்கோ? என்றும், நெய்ப்பையும் சுவையையுமுடைய தேறல் என்றும் பொருளுரைப்பர்.

நச்சுமருந்தம்—வினைத்தொகை. மருந்தம் என்பதில், அம்—சாரியை. (௫)

பாலென்கோ நான்குவேதப்பயனென்கோ* சமயநீதி
நூலென்கோ நுடங்குகேள்வியிசையென்கோ* இவற்றுள்நல்ல
மேலென்கோ வினையின்மிக்கபயனென்கோ* கண்ணனென்கோ
மாலென்கோமாயனென்கோ வானவராதியையே. (௬)

வானவர் ஆதியை	தேவாதி தேவனான எம்பெருமானை	நல்ல	சிறந்த
பால் என்கோ	பால் என்பேனோ?	மேல் என்கோ	மேன்மையுடையது என்பேனோ?
பயன் நான்கு வேதம் என்கோ	(பிரமாணங்களுக்குள்) சிறந்ததான நால் வேதங்களென்பேனோ?	வினையின்	(செய்கின்ற) முயற்சியைக் காட்டிலும்
சமயம்	வைதிக மதத்தைத் தெரிவிக்கின்ற	மிக்க	மிகப் பலமடங்கு மேம்பட்டுவிளைகின்ற
நீதி	முறைமையையுடைய	பயன் என்கோ	பலன் என்பேனோ?
நூல் என்கோ	(இதிஹாஸ புராணங்களாகிற) சாஸ்திரங்கள் என்பேனோ?	கண்ணன் என்கோ	(உனக்கு நான இருக்கிறேன், நீ அஞ்சேலெண்டா என்று சரமச்லோகத்தினால் அபயமளித்த) ஸ்ரீகிருஷ்ணன் என்பேனோ?
நுடங்கு	(கேட்டவர்களை) ஈடுபடுத்துகின்ற		
கேள்வி	(செவியிற்) கேட்டலையுடைய		
இசை என்கோ	ஸங்கீதமென்பேனோ?	மால் என்கோ	அடியவர் திறத்து வியாமோஹமுடையவனென்பேனோ?
இவற்றுள்	கீழ்ச்சொன்ன வேதம் முதலிய எல்லாவற்றிலும்	மாயன் என்கோ	ஆச்சரியமான குணசேஷ்டிதங்களையுடையவனென்பேனோ?

* * *—[பாலென்கோ] வேதம் முதலியவைகளான இயலும் இசையுமாயுள்ள சப்தராசிகளை எம்பெருமான் தனக்கு விசேஷணமாகப் பெற்றிருக்கின்றபடியைக் கூறுகின்றாரிப்பாட்டில். வேத முதலியன தன்னையுணர்த்த, தான் அவற்றால் உணரப்படுபவனாதலால் எம்பெருமானுக்கு வேதம் முதலியன விசேஷணமாகும். கீழ்ப்பாசுரத்திற் கூறிய எம்பெருமானது இனிமை பின்னும் தோன்றியதனால் பாலென்கோ என்றார். "கண்ணனென்கோ" என்பதுமுதல் எம்பெருமானது தாழுந்தன்மையையுணர்த்தும்.

"நான்கு வேதப் பயனென்கோ" என்பதை 'பயன் நான்கு வேதமென்கோ' என்று கூட்டிப் பொருள்கொள்ள வேண்டுமென்று ஆசிரியர்களின் கொள்கை; வேதம் முழுவதும் எம்பெருமானது ஆராதனத்தின் தன்மையையும், ஆராதிக்கப்படுகின்ற அந்த எம்பெருமானது தன்மையையுமே உணர்த்துவதாகி வேறொன்றையுணர்த்தாமையால், வேதத்தின் பயன் [ஸாரமான பொருள்] எம்பெருமான்—என்று கூறுதற்கு இடமில்லை; ஆகையால், பயனாகிய நான்கு வேதம் என்று கூட்டி, பிரமாணங்களுக்குள் சிறந்ததான நான்கு வேதங்களாலும் பிரதிபாதிக்கப்படுபவன் என்று பொருள் கொள்வது உசிதம். இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—

"[நான்கு வேதப்பயனென்கோ.] நாலுவகைப்பட்ட ப்ரமாணஜாதத்தில் ஸாரபூதமான வேதமாகிற ப்ரயோஜனமென்பேனோ? வேதத்திலே வேறேயும் ஓர் அம்சம் ஒருவனை ஸ்துதிக்கிறதோ நான்கு வேதத்தில் பயனென்கோ என்ன வேண்டுவது; அங்ஙனன்றியே, வேதந்தான் ஆராதந ஸ்வரூபம் சொல்லுமிடமும் ஆராத்யஸ்வரூபம் சொல்லுமிடமுமாய்க் கட்டடங்க இவனையே சொல்லுகையாலே வேதத்திலே [illegible]க்கும் ப்ரயோஜநமல்லாத விடமில்லை;* வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய:* என்றானிறே."—என்பது. பிரமாணங்களுள் வேதம் ஸாரமென்பதற்குக் காரணம்—நித்தியமாய் அபௌருஷேயமாய் [எழுதாக்கிளவியாய்], பிரமித்தல் முதலிய குற்றங்கட்கு இடமில்லாது நிற்றலாலென்க. இனி, முதலடியில் நான்கு வேதம் என்பதனை மத்திமதீபமாக்கி, நான்கு வேதம் பாலென்கோ—நான்கு வேதங்களிலுமுள்ள சாகைமுதலிய பிரிவுகள் என்பேனோ? நான்கு வேதம் பயன் என்கோ—நான்கு வேதங்களினாலும் தேர்ந்து அறியப்படும் பொருள் என்பேனோ? என்று உரைப்பாருமுளர்.

வேதப்பொருளில் ஸந்தேஹம் தோன்றிய விடங்களில் பொருளை நிர்ணயிப்பதற்கு உபப்ருஹ்மணமாய் [வேதப்பொருளைப் போஷிப்பதாய்] நிற்றலால் இதிஹாஸபுராணங்கள் சமயநீதி நூல் எனப்பட்டன. இனி, சமயம்—கொள்கையை நாட்டுவதற்குரிய, நீதி—நியாயங்களை விளக்குவதான, நூல்—மீமாம்ஸா சாஸ்த்ரம் என்றும் உரைப்பர். எல்லாம் சொல்லவேணுமென்று தொடங்கிய ஆழ்வார் பக்திபாரவச்யத்தினால் மேலே செல்லமாட்டாமையால் 'இவற்றுள்

கலைக்களஞ்சிய 159929

நல்ல மேலென்கோ' என்று கூறியொழிந்தார். "இவற்றுள் நல்ல மேலென்கோ" என்பதற்கு—கீழ்க்கூறிய வேதம் முதலியவற்றுக்குள் தோன்றும் சிறந்த போக்கியதையென்பேனோ? என்று பொருள் கூறுவாருமுளர். கலநெல்லை விதைத்து நூறுயிரங்கலமாக விளைத்துக் கொள்வாரைப்போலே அற்ப முயற்சியினால் பெரும்பயனைக் கொடுத்தற்கு உரியவன் என்பார் "வினையின் மிக்க பயன்" என்றார்; எம்பெருமான் 'மனப்பூர்வமான அன்பு இல்லாமல் போலியன்போடு என்னையடைந்தாரையும் நான் ஒருபோதும் கைவிடேன்' என்றுகூறுபவனாதலால் அப்பிரானை இவ்வாறு கூறுதல் ஏற்கும். எம்பெருமான் பிரமன் முதலிய எல்லாத் தேவர்கட்கும் தான் தலைவனாக இருந்தும் அடியவர்க்கு எளியவனாகித் தூது போதல் ஸாரத்யஞ்செய்தல் முதலிய இழிதொழில்கள் செய்ததுபற்றி மாயன் என்றார். ... ... (சு)

வானவராதியென்கோ வானவர்தெய்வமென்கோ*
வானவர்போகமென்கோ வானவர்முற்றுமென்கோ*
ஊனமில்செல்வமென்கோ ஊனமில்சுவர்க்கமென்கோ*
ஊனமில்மோக்கமென்கோ ஒளிமணிவண்ணனையே. (எ)

ஒளி மணி வண்ணனை	பிரகாசமுள்ள மாணிக்கம்போன்ற வடிவையுடைய பெருமானை	வானவர்	அந்த வானவர்கட்கு
வானவர் ஆதி என்கோ	நித்யஸூரிகட்குத் தலைவன் என்பேனோ?	முற்றும் என்கோ	(இதுவரையிற் கூறப்படாத) எல்லாமும் என்பேனோ?
வானவர் தெய்வம் என்கோ?	அந்த நித்தியஸூரிகளால் கதியென்று பற்றப்படும் தெய்வமென்பேனோ?	ஊனம் இல்	என்றும் அழிதல் இல்லாத
		செல்வம் என்கோ	செல்வமென்பேனோ?
வானவர் போகம் என்கோ	அந்த நித்யஸூரிகளால் அனுபவிக்கப்படுகின்ற பொருள் என்பேனோ?	ஊனம் இல் சுவர்க்கம் என்கோ	ஒருநாளும் நசிக்காத ஸ்வர்க்கபோகமென்பேனோ?
		ஊனம் இல் மோக்கம் என்கோ	விலக்ஷணமான மோக்ஷமென்பேனோ?

* * * [வானவராதி.] எம்பெருமான் ஐச்வர்யம் முதலிய புருஷார்த்தங்களையுடையவனென்பதை இப்பாட்டிலருளிச்செய்கிறார். "வானவர் தெய்வம், வானவர் போகம், வானவர் முற்றும்" என்று வருவதனால் 'வானவராதி' என்பதற்கு— கீழ்ச்செய்யுளிற்போல ப்ரஹ்மாதி தேவர்கட்குத் தலைவன் என்று பொருள் கொள்ளாது நித்யஸூரிகட்குத் தலைவன் என்று பொருள் உரைக்கப்பட்டது. எம்பெருமான் ப்ரஹ்மாதி தேவர்களைப் படைத்தல் முதலியன செய்வதன்றி "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன்" என்றபடி எல்லாமுமாக இருப்பது நித்யஸூரிகட்கே யென்க. வானவர் போகமென்கோ என்பதற்கு அவ்வானவர்கட்கு ஆராதனையினாலுண்டாகிய பயனை

பேரின்பம் என்பேனோ? என்றும், வானவர் முற்றுமென்கோ என்பதற்கு—அவ்வானவர்கட்கு ஸகலவகையான ரக்ஷணமும் என்பேனோ? என்றும் உரைக்கலாம்.

ஊனமில் செல்வம்—சிலநாள்நின்று வற்றுவதல்லாமல் எந்நாளும் அழியாத ஸம்பத்து. ஊனமில் சுவர்க்கம்—சிலநாளிருந்து புண்ணியப்பயனொழிந்தபிறகு தள்ளும்படியானதல்லாமல் கல்பகாலம்வரையில் அழிவின்றி வாழும் சுவர்க்கம். ஆத்மாவையநுபவித்தல் மாத்திரத்தையுடைய கைவல்யமென்னும் மோக்ஷத்தினும் வேறுபாடு விளங்க, பரமாத்மாவான எம்பெருமானையநுபவித்தலையுடைய பரமபுருஷார்த்தமாகிற மோக்ஷத்தை 'ஊனமில் மோக்கம்' என்றார். .... (எ)

ஒளிமணிவண்ணனென்கோ ஒருவனென்றேத்தநின்ற*
நளிர்மதிச்சடையனென்கோ நான்முகக்கடவுளென்கோ*
அளிமகிழ்ந்துலகமெல்லாம் படைத்தவையேத்தநின்ற*
களிமலர்த்துளவனெம்மான் கண்ணனைமாயனையே. (அ)

அளி மகிழ்ந்து	உயிர்களைப் பாதுகாத்தலைவிரும்பி	ஒளி மணி வண்ணன் என்கோ	பிரகாசமுள்ள மாணிக்கம் போன்ற வடிவையுடையவனென்பேனோ?
உலகம் எல்லாம்	எல்லா உலகங்களையும்	ஒருவன் என்று	ஒப்பற்ற கடவுள் என்று
படைத்து	ஸ்ருஷ்டித்து		
அவை	அவ்வுலகங்களெல்லாம்		
ஏத்த நின்ற	(தன்னைத்) துதிக்கும்படி நிற்கின்ற	ஏத்த நின்ற	(தன்னுடைய அடியவர் யாவரும்) துதிக்கும்படி நின்ற
களி மலர் துளவன்	தேனையும் பூவையுமுடைய திருத்துழாய்மாலையையணிந்தவனும்	நளிர் மதி சடையன் என்கோ	குளிர்ந்த பிறைச்சந்திரனைத் தனது சடைமுடியிலேயுடைய ருத்திரன் என்பேனோ?
எம் மான்	எமக்குத் தலைவனும்		
மாயனை	மாயங்களையுடையவனுமாகிய	நான்முகன் கடவுள் என்கோ	பிரமதேவனென்பேனோ?
கண்ணனை	கண்ணபிரானை		

* * * [ஒளிமணிவண்ணன்.] இந்தவுலகில் பிரதானரான சிவனையும் பிரமனையும் எம்பெருமான் தான் உடைமையாகப் பெற்றிருத்தலை ஆழ்வார் இந்தப்பாசுரத்தில் அருளிச்செய்கிறார். வடிவழகில் மிக்க ஈடுபாட்டினால் "ஒளிமணிவண்ணனென்கோ" என்று பின்னும் கூறினார். "ஒருவனென்றேத்த நின்ற நளிர்மதிச் சடையனென்கோ" என்றவிடத்திற்கு நம்பிள்ளையீடு;— "இவன் ஜகத்துக்கு ப்ரதாநனென்று அவிவேகிகள் ஏத்தும்படியாய்க் குளிர்ந்த மதியையும் சடையையுமுடைய ருத்ரனென்பேனோ" என்று.

மஹாப்ரளயத்தில் ஆத்மவர்க்கங்கள் யாவும் உருமாய்ந்து மூலப்ரக்ருதியிலே லயித்துக்கிடக்க, எம்பெருமான் 'இவ்வுயிர்கள் நம்மையறிந்து ஈடேறவேணும்' என்று தனது திருவுள்ளத்திலெழுந்த பெருங்கருணையால் தன்னையடைவதற்குத்

கருவியாகக் கைகால் முதலிய உறுப்புக்களோடு அவ்வுயிர்களைப் படைத்தானென்பது நூல் துணிபாதலால் "அளிமகிழ்ந்து உலகமெல்லாம் படைத்து" என்றார். ஏத்த என்று மேல்வருவதனால், 'உலகமெல்லாம்' என்பது உலகத்து உயிர்வர்க்கங்களையே காட்டும். எம்மான் என்பதற்கு—என்னைத் தேவதாந்தரங்களுக்கு ஆட்படவொட்டாது தன்னிடத்தே அடியவனும்படி செய்தவன் என்று கருத்துக் கொள்ளலாம். மாயன்—வெண்ணெய் களவாடுதல் முதலிய ஆச்சரியமான தொழில்களையுடையவன் என்று உரைப்பர்.

நளிர்மதிச்சடையன் என்பதில் அடங்கிய கதை:—சந்திரன் தக்ஷமுனிவரது புத்திரிகளாகிய அச்விநி முதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்களையும் மணஞ்செய்துகொண்டு அவர்களுள் ரோஹிணி யென்பவளிடத்தில் மிகவும் காதல் கூர்ந்து அவளுடனே எப்போதும் கூடிவாழ்ந்திருக்க, மற்றை மகளிரின் வருத்தத்தை நோக்கி முனிவன் அவனை 'க்ஷயமடைவாயாக' என்று சபிக்க, அச்சாபத்தால் சந்திரன் பதினைந்து கலைகளுங் குறைந்து மற்றைக் கலையொன்றையும் இழப்பதன் முன்னம் சிவபிரானைச் சரணமடைய, அப்பெருமான் அருள்கூர்ந்து அவ்வொற்றைக் கலையைத் தன் தலையிலணிந்து மீண்டுங் கலைகள் வளர்ந்து வரும்படி அநுக்ரஹித்தான் என்பதாம்: திருப்பாற்கடல் கடைகையில் அதில் நின்று உண்டான பலபொருள்களுடனே விஷமும் பிறைச்சந்திரனும் தோன்ற, திருமால் அவற்றுள் விஷத்தைச் சிவபிரானுக்குக் கொடுத்து உண்ணச் சொல்லி அதனால் அப்பிரானுக்கு வெப்பமுண்டாகாமல் தணித்திருத்தற் பொருட்டு உடனே சந்திரனையுங் கொடுக்க, அதனை அப்பெருமான் சிரமேற் கொண்டனன் என்றும் வரலாறு கூறப்படும்.

'ஏத்தநின்ற சடையன்' என்றும், 'படைத்து ஏத்த நின்ற ஆளவன்' என்றும் அந்வயிக்கும். .... (அ

கண்ணனைமாயன்றன்னைக் கடல்கடைந்தமுதங்கொண்ட*
அண்ணலையச்சுதனை அனந்தனையனந்தன்தன்மேல்*
நண்ணிநன்குறைகின்றானை ஞாலமுண்டுமிழ்ந்தமாலை*
எண்ணுமாறறியமாட்டேன் யாவையும்யவருந்தானே. (௯)

கண்ணனை	(அடியார்க்கு எளியனாய்) க்ருஷ்ணனாகத் திருவவதரித்தவனும்	அண்ணலை	பெருமையையுடையவனும்
மாயன் தன்னை	ஆச்சரியமான குணஞ் செயல்களையுடையவனும்	அச்சுதனை	(தன்னையடைந்தவரை) ஒருபோதும் நழுவவிடாதவனும்
கடல் கடைந்து	பாற்கடலைக் கடைந்து	அனந்தனை	அளவிட முடியாத ஸ்வரூபரூபகுணவிபூதிகளையுடையவனும்
அமுதம் கொண்ட	அமிருதத்தையெடுத்து (த் தேவர்கட்கு)க் கொடுத்த	அனந்தன் தன்மேல் நண்ணி	திருவனந்தாழ்வான் [மீது] பொருந்தி

நன்கு உறைகின்றானை	நன்றாகக் கண்வளர்ந்தருள்பவனும்	எண்ணும் ஆறு	(இத்தன்மையனென்று) நினைத்துக் கூறும் வகையை
ஞாலம்	பிரபஞ்சத்தை	அறிய மாட்டேன்	அறிகின்றேனில்லை;
உண்டு	(பிரளயகாலத்தில்) வயிற்றில் வைத்துப் பாதுகாத்து	யாவையும்	எல்லாவகைப்பட்ட அசேதனப் பொருள்களும்
உமிழ்ந்த	(அந்தப் பிரளயம் நீங்கியவுடனே) வெளிப்படுத்திய	யவரும்	எல்லாவகைப்பட்ட சேதனப்பொருள்களும்
மாலை	வாத்ஸல்யமுடையவனுமான திருமாலை	தானே	அந்த எம்பெருமான் தானேயாவன்.

* * * [கண்ணனை மாயன் தன்னை.] எம்பெருமானுடைய விபூதிகளைத் தனித்தனியே சொல்லிமுடித்தல் முடியாத காரியம்; சுருக்கமாகச் சொல்லில், சேதனப்பொருள்களும் அசேதனப் பொருள்களுமாகிய எல்லாமும் அவனுடைய விபூதிகளேயாம்—என்கிறது இப்பாசுரம்.

பகவத்கீதையில் தனது விபூதிகளை அர்ஜுநனுக்குப் பரக்கச் சொல்லிவந்த ஸ்ரீக்ருஷ்ணபகவான் "நாந்தோ விபூதயஸ்ய ——நாஸ்தி அந்தோ விஸ்தரஸ்ய மே." [எனது விபூதிகளின் பரப்புக்கு ஓரெல்லையில்லை] என்று கூறியதுபோல, இவ்வாழ்வாரும் கீழே எம்பெருமானது விபூதிகளிற் சிலவற்றைக் கூறிவந்து "எண்ணுமாறு அறியமாட்டேன்" என்று இங்குக் கூறுகின்றனரென்க. "கடல் கடைந்து அமுதங்கொண்ட அண்ணல்" என்றதனால் தனது திருவடிகளை விரும்பியடைந்தார்க்கு அன்றி வேறுபயனை வேண்டினார்க்கும் தன்னுடம்பு நோவவும் அவர்கள் வேண்டியபடி நன்மைபுரிபவன் எம்பெருமான்—என்பது பெறப்படும்.

நன்கு உறைகின்றானை = நாச்சிமாராலும் எழுப்பவொண்ணாதபடி கண்வளர்ந்தருளுகிறவனை என்றுரைப்பர். அண்ணல்—பெருமை; அதனையுடையவன்; ஆண்பாற்சிறப்புப்பெயர். அனந்தன் என்ற திருநாமம் எம்பெருமானுக்கு வழங்குதல்போலவே ஆதிசேஷனுக்கும் வழங்கும். எம்பெருமானை அனந்தனென்றற்குக் காரணம் இப்பதிகத்தின் அவதாரிகையில் விரித்துரைக்கப்பட்டது காண்க. ஆதிசேஷனை அனந்தனென்பது அடிமைத்தன்மையில் எல்லை நிலையிலிருப்பவன் [எம்பெருமானுக்கு அடிமை செய்வதில் யாவரினும் விஞ்சிநிற்பவன்] என்பது பற்றியென்க.

யாவையும் என்றதனால் அசேதனப்பொருள்களையும், யவரும் என்றதனால் சேதனப்பொருள்களையும் குறித்தார். உம்மைகள்—முற்றுப் பொருளன. விசேஷணம் விசேஷ்யம் என்ற இரண்டிடத்திலும் வேற்றுமையுருபை விரிப்பது வடமொழி நடை.

கடல்கடைந்து அமுதங்கொண்ட வரலாறு:—முன்னொருகாலத்தில் இவ்வண்டகோளத்திற்கு அப்புறத்திலுள்ள விஷ்ணுலோகத்திற் சென்று திருமகளைப் புகழ்ந்துபாடி, அவளால் ஒரு பூமாலை பிரசாதிக்கப்பெற்ற ஒரு வித்யாதரமகள் மகிழ்ச்சியோடு அம்மாலையைத் தன்கை வீணையில் தரித்துக்கொண்டு பிரமலோக வழியாய் மீண்டு வருகையில், துர்வாசமுனி எதிர்ப்பட்டு அவளைவணங்கித் துதிக்க, அவ்விஞ்சைமங்கை அம்மாலையை அம்முனிவனுக்கு அளித்திட்டாள். அதன் பெருமையையுணர்ந்து அதனைச் சிரமேற்கொண்ட அம்முனிவன் ஆனந்தத்தோடு தேவலோகத்திற்கு வந்து அப்பொழுது அங்கு வெகு உல்லாஸமாக ஐராவதயானையின்மேற் பவனி வந்துகொண்டிருந்த இந்திரனைக் கண்டு அவனுக்கு அப்பூமாலையைக் கைநீட்டிக்கொடுக்க, அவன் அதனை அங்குசத்தால் வாங்கி அந்த யானையின் பிடரியின்மேல் வைத்தவளவில் அம்மதவிலங்கு அதனைத் துதிக்கையாற் பிடித்து இழுத்துக் கீழெறிந்து காலால்மிதித்துத் துவைத்தது. அது கண்ட முனிவன் கடுங்கோபங்கொண்டு இந்திரனை நோக்கி 'இவ்வாறு செல்வச் செருக்குற்ற நினது ஐச்வரியங்களெல்லாம் கடலில் ஒளிந்துவிடக்கடவ' என்று சபிக்க, உடனே தேவர் செல்வம்யாவும் ஒழிந்தன. ஒழியவே, அசுரர் வந்து பொருது அமரரை வெல்வாராயினர். பின்பு இந்திரன் தேவர்களோடு திருமாலைச் சரணமடைந்து அப்பிரான் அபயமளித்துக்கட்டளையிட்டபடி அசுரர்களையுந் துணைக்கொண்டு, மந்தரமலையை மத்தாக நாட்டி வாசுகி என்னும் மகாநாகத்தைக் கடைகயிறாகப்பூட்டித் திருப்பாற்கடலைக்கடைந்து அமிருதத்தை எடுத்துத் தேவர்கட்குக்கொடுத்தனனென்பதாம்.

பிரமன் முதலிய ஸகலதேவர்களுமுட்பட யாவும் அழிந்துபோகின்ற யுகாந்தகாலத்திலே ஸ்ரீமஹாவிஷ்ணு அண்டங்களையெல்லாம் தன் திருவயிற்றில் வைத்து அடக்கிக்கொண்டு சிறுகுழந்தைவடிவமாகி ஆதிசேஷனது அம்சமானதொரு ஆலிலையின்மீது பள்ளிகொண்டு யோகநித்திரைசெய்து அந்தப்பிரளயம் நீங்கினவாறே அவைகளை முன்போலவே வெளிநாடுகாண உமிழ்வனென்பது ஞாலமுண்டுமிழ்ந்த வரலாறு.

யவரும் என்றவிடத்து 'எவரும்' என்பதே சுத்தபாடமென்று சிலர் கூறாநிற்பர்; இதைப்பற்றி "உயர்வறவுயர்நலமுடையவன் யவனவன்" என்றவிடத்து யாமுரைத்தது காண்க. .... (அ)

யாவையும்யவருந்தானாய் அவரவர்சமயந்தோறும்*
தோய்விலன்புலனைந்துக்கும் சோலப்படானுணர்வின்மூர்த்தி*
ஆவிசேருயிரினுள்ளால் ஆதுமோர்பற்றிலாத*
பாவனையதனைக்கூடில் அவனையுங்கூடலாமே. (௯)

உணர்வின் மூர்த்தி	ஞானஸ்வரூபமாக இருக்கின்ற எம்பெருமான்
யாவையும்	எல்லா அசேதனப் பொருள்களும்
யவரும்	எல்லாச் சேதனர்களும்
தான் ஆய்	தானேயாகியும் [சேதநாசேதநங்களில் அந்தராத்மாவாகத்தான் பிரவேசித்திருந்தும்]
அவர் அவர் சமயம் தோறும்	அந்தந்தச் சேதனர்கட்கு உரியனவான (சுகம் துக்கம் முதலிய நிலைமைகளில்
தோய்வு இலன்	(அவர்களைப் போலத் தனக்கு) யாதொரு கலப்பும் இல்லாதவன்;
புலன் ஐந்துக்கும் சொலப்படான்	பஞ்சேந்திரியங்களின் அறிவுக்கும் விஷயமாகச் சொல்லப்படாதவன்; [ஐம்புலன்களாலும் அறியப்படாதவனென்றபடி.]

(ஆத்மாக்களுக்கு உள்ளேயிருந்தும் அவைகளுடைய சுகதுக்கங்கள் எம்பெருமானைச் சேரமாட்டா என்றது எவ்வாறு பொருந்துமெனின்.)

ஆவி சேர் உயிரின் உள்	உடம்பைப் பொருந்திய ஆத்மாவினுடைய ஸ்வரூபத்திலே
ஆதும்	(சரீரத்தைச்சார்ந்த இளமை முதலிய தன்மைகள்) எதிலும்
ஓர் பற்று இலாத	ஒரு ஸம்பந்தமும் இல்லையென்கிற
பாவனை	எண்ணமானது
அதனை கூடில்	அந்த ஆத்மாவுக்குத் தகுமென்று தோன்றினால்
அவனையும்	அந்த எம்பெருமானுக்கும் (சேதநர்களின் சுகதுக்கங்கள் சிறிதும் சேரா என்கிற இதுவும்).
கூடல் ஆம்	தகும்.

* * * [யாவையும்யவரும்.] உடலுக்கு உள்ளேயிருக்கிற உயிர்கட்கு அந்த உடலைச்சார்ந்த இளமை நரை திரை முதலிய வேறுபாடுகள் தட்டுவதில்லையென்ற எண்ணம் மனத்திற்படுமாயின், எம்பெருமான் சேதநா சேதநங்களோடு கலந்திருந்தாலும் அவற்றின் சுகம் துக்கம் முதலிய நிலைமைகள் அவ்வெம்பெருமானுக்குத் தட்டாவென்பதும் நன்கு விளங்குமென்பது இப்பாசுரத்தின் தாற்பரியமாகும். ஆத்மாக்களுக்கு உடம்பைச்சேர்ந்த இளைப்பு பருமை முதலியன கூடாவிட்டாலும் அவ்வுடம்பைச்சார்ந்த சுகதுக்கங்கள் தோன்றுவதுபோல, ஸர்வேச்வரன் சேதநாசேதநங்களில் அந்தராத்மாவாய் நிற்கும்போது அசேதநங்களின் பரிணாமம் கூடாவிட்டாலும் ஆத்மாக்களின் சுகதுக்கங்கள் முதலியவை கூடவேண்டாவோ வென்னில்;—குற்றவாளியும் சிறைகாணவந்த ராஜகுமாரனும் ஆகிய இருவரும் சிறைச்சாலையில் இருந்தனரேயாயினும் குற்றவாளி மாத்திரம் வருந்திநிற்க, அச்சிறையிலிருத்தலாலாகிற வருத்தம் அரசகுமாரனுக்கு நிகழாதவாறுபோல, ஆத்மாவும் பரமாத்மாவும் உடலிற் புக்கிருந்தனரேயாயினும் ஆத்மா கருமத்தினால் கட்டுப்பட்டுச் சுகதுக்கங்களையநுபவித்து நிற்க எம்பெருமான் தன்னிச்சையினாலே புக்கிருப்பதனால் அந்தச் சுகதுக்கங்களையநுபவியாமல் நிற்பனென்க.

"யாவையும் யவருந்தானாய்" என்று வந்ததனால் "அவரவர் சமயந்தோறும்" என்றவிடத்தில் "அவையவை சமயந்தோறும்" என்றும் உபலக்ஷணத்தினாற்

கொள்க. அவரவரென்ற அடுக்கு சேதநருடைய பன்மையைப்பற்ற. சமயம்—உரியனவாக ஏற்பட்டுள்ள முறைமை. அவரவர் சமயம்—சேதநர்களின் சுகதுக்கங்கள்; அவையவைசமயம்—அசேதநங்களின் இளைப்பு பருத்தல் முதலிய பரிணாமங்கள். புலன்—புலம்; சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து. இந்திரியவுணர்ச்சிகள்: இச்சொல் இங்கு இலக்கணையால் மெய்வாய்கண் மூக்குச் செவியென்னும் பஞ்சேந்திரியங்களையுணர்த்திற்று. 'புலனைந்துக்குஞ் சொலப்படான்' என்றவிடத்தில், சொல்லுதல்—அறிதலாய், ஐம்பொறிகளால் அறியமுடியாதவனென்று பொருளுரைப்பினுமாம். ஐந்துக்கு—உருபு மயக்கம்.

பின்னிரண்டடிகட்கு—, ஆவி—உயிரை, சேர்—அடைந்துள்ள, உயிரினுள்—பரமாத்மாவினிடத்தில், ஆதும் ஓர்பற்று இலாதபாவனையதனை—புறம்பே வேறொன்றிலும் சிறிதும் செல்லாத [இடையறாமல் அப்பிரானிடத்தே செல்லுகின்ற] பக்தியை, கூடில்—அடைந்தால், அவனையும் கூடல் ஆம்—அப்பரமாத்மாவையுங் கூடலாம். என்பதாகவுரைப்பாருமுளர்; உபாயாந்தரங்களிலுண்டான பற்றுமுழுவதும் விடுதலாகிற ப்ரபத்தியை மேற்கொண்டால் அப்பரமபுருஷனையுங்கூடலாமென்பதாக உரைப்பாருமுளர்; வேறுபொருள் எதிலும் பற்று இல்லாதபாவனையை [அநந்யஸ்ம்ருதியை]க் கூடினால் அவனைக்கூடலாமென்றும் உரைப்பாருளர். எம்பெருமானார் இப்பொருள்களையெல்லாம் தள்ளினர்; இந்தப் பதிகத்தில் எம்பெருமான் சேதநாசேதநங்களில் அந்தராத்மாவாய் நிற்கின்ற தன்மையைக் கூறுவதனால் அதற்கு ஏற்ப, எம்பெருமான் வியாபித்திருக்கிற சேதநாசேதனங்களில் தோஷங்கள் அவ்வெம்பெருமானுக்குத் தட்டமாட்டாவென்பதைக் கூறவேண்டுவது முக்கியமாதலால் முந்தின பொருளே சிறப்புடையதென்பது எம்பெருமானார் திருவுள்ளமாம்.

உள்ளால்=ஆல்—அசை. பாவநா என்ற வடசொல் பாவனையெனத் திரிந்தது. 'பாவனையதனை' என்றதில் அது—பகுதிப்பொருள்விகுதி. ... (௧0)

கூடிவண்டறையுந்தண்டார்க் கொண்டல்போல்வண்ணன்தன்னை*
மாடலர்பொழிற்குருகூர் வண்சடகோபன்சொன்ன*
பாடலோராயிரத்துள் இவையுமொருபத்தும்வல்லார்*
வீடிலபோகமெய்தி விரும்புவரமரர்மொய்த்தே. (௧௧)

வண்டு	வண்டுகள்	மாடு	சுற்றுப்பக்கங்களில்
கூடி	மொய்த்து	அலர்	மலர்ந்த
அறையும்	(மதுபானத்தினாலுண்டான களிப்பினால்) ரீங்காரஞ்செய்கின்ற	பொழில்	சோலைகளையுடைய
		குருகூர்	திருக்குருகூரிலவதரித்த
தண் தார்	குளிர்ந்த மாலையையுடைய	வள்	ஔதார்யத்தையுடைய
கொண்டல் போல் வண்ணன் தன்னை	காளமேகச்யாமளனைக்குறித்து,	சடகோபன்	நம்மாழ்வார்
		சொன்ன	பாடியருளிய

பாடல் ஓர் ஆயிரத்துள்	ஒப்பற்ற ஆயிரம் பாசுரங்களுள்	வீடு இல போகம் எய்தி	இடைவிடுதலில்லாத [நிரந்தரமான] பகவதநுபவத்தைப்பெற்று
இவை ஒரு பத்தும்	இந்தப்பத்துப் பாசுரங்களையும்	அமரர்	நித்யஸூரிகளால்
		மொய்த்து	நெருங்கி
வல்லார்	அறியவல்லவர்	விரும்புவர்	விரும்பப்படுவர்.

* * * [கூடிவண்டறையும்.] இந்தப்பத்துப்பாசுரங்களையும் ஓதினவர்கள் இடைவீடில்லாத பகவதநுபவத்தை [நித்யகைங்கர்யத்தை]ப் பெற்று நித்யஸூரிகளால் விரும்பப்படுவர்கள் என்று பயனுரைத்துத்தலைக்கட்டினாராயிற்று. மஹாஜ்ஞாநவான்களான நித்யஸூரிகள் "இருள்தருமா ஞாலமான இந்தப் பிரபஞ்சத்திற் பிறந்தும் நம்மைப்போன்று நன் ஞானத்தைப் பெற்று எம்பெருமானை இவ்வாழ்வார் அநுபவிக்கின்றனரே!" என்று நம்மாழ்வாரிடத்துத் தாம் கொண்ட பேரன்பினால், ஆழ்வாரருளிச் செய்த இப்பத்துப் பாசுரங்களையும் ஓதினவர்களிடத்திலும் ப்ரீதி கொண்டு ஸர்வேச்வரனையும் விட்டு இவர்களை நெருங்கி ஆதரிப்பர்களென்க.

ஆழ்வார்தாம் இந்த லீலாவிபூதியை எம்பெருமானுடைய ஸ்வரூபமாக எண்ணி ஈடுபட்டதனோடு நில்லாமல் அதனை யாவரும் அநுஸந்திக்கும்படி செந்தமிழ்ப்பாடலினால் பாடியருளித் தந்த மஹோபகாரகராதலால் வண்சடகோபன் என்றார்.

வீடுஇலபோகம்= வீடு—'விடு' என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். இல—இன்மையினடியாப் பிறந்த எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம். போகம் என்னும் வடசொல் போகமெனத்திரிந்தது. விரும்புவர் என்ற பயனிலைக்கு வல்லார் என்பது செயப்படுபொருள். அமரர் வல்லாரை விரும்புவர் என்றபடியாகும். ... ... (௧௧)

நான்காந்திருவாய்மொழி உரை முற்றிற்று.

[x]

ஆழ்வார் திருவடிகளே சரணம்,

ஸ்ரீ:.

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

பூதைஸ் தத்கார்யபூதைஸ் சுபநிஜவபுஷா தீப்திமத்பி: பதார்த்தை:
பத்த்யாஸ்வாதோபபந்நை: ச்ருதிமுகஸுகடாசேஷசப்தப்ரபஞ்சை:
நாநாகாரை: புமர்த்தைர் ஜகததிபதிபிச் சேதநாசேதநௌகை:
ஜுஷ்டம் தோஷைரதுஷ்டம் நிகிலதநுதயா ஸம்ஸ்துவந் துஷ்டவாம்ஸ்தம்॥

[நான்காவது பாதத்தின் முதலிலுள்ள ஜுஷ்டம் என்பது ஒவ்வொரு த்ருதீயாந்தவிசேஷ்யங்களோடும் அந்வயிக்கும். பூதை: ஜுஷ்டம், தத்கார்ய பூதை: ஜுஷ்டம், நிஜவபுஷாஜுஷ்டம் என்றிங்ஙனே கண்டு கொள்க.]

1. பூதை:ஜுஷ்டம். * பொருவில்சீர்ப்பூமியென்கோ.* பூமிமுதலிய பஞ்சபூதங்களோடும் கூடியிருந்துள்ளவன். (சரீரசரீரிபாவத்தில் நோக்கு.)

2. தத்கார்யபூதை:. * குன்றங்களனைத்துமென்கோ. * பூமி முதலிய பூதங்களின் காரியங்களான பர்வதம் முதலியவற்றோடு கூடியிருந்துள்ளவன்.

3. சுபநிஜவபுஷா. *பங்கயக்கண்ணனென்கோ. * அழகிய திவ்யமங்கள விக்ரஹத்தோடுகூடியவன்.

4. தீப்திமத்பி: பதார்த்தை:. * சாதிமாணிக்கமென்கோ. *மாசற்ற மாணிக்கம் பொன் முத்து முதலியவற்றோடு கூடியுள்ளவன்.

5. பத்த்யாஸ்வாதோபபந்நை:. * கச்சமாமருந்தமென்கோ. * ஹிதங்களாயும் மதுரங்களாயுமிருக்கிற மஹௌஷதம் அமுதம் முதலியவற்றோடு கூடியுள்ளவன். [முதல்பாதத்தின் முடிவிலுள்ள (பதார்த்தை:) என்பது காகாக்ஷிந்யாயத்தாலே இங்கும் அந்வயிக்கும்.]

6. ச்ருதிமுகஸுகடாசேஷ சப்தப்ரபஞ்சை:. * நான்குவேதப்பயனென்கோ * ச்ருதிஸ்ம்ருதி இதிஹாஸ புராணம் முதலியவற்றோடும் கூடியுள்ளவன்.

7. நாநாகாரை: புமர்த்தை:. * பனைமில் செல்வமென்கோ * பலவகைப்பட்ட ஐச்வர்ய ஸ்வர்க்கமோக்ஷபுருஷார்த்தங்களோடு கூடியுள்ளவன்.

8. ஜகததிபதிபி:. * ஒருவனென்றேத்தநின்ற நளிர்மதிச்சடையனித்யாதி.* உலகில் பிரதானரான சிவன் பிரமன் முதலானோரோடு கூடியுள்ளவன்.

9. சேதநஅசேதநௌகை: ஜுஷ்டம். * யாவையும் யவருந்தானே. * சேதநாசேதநஸமூஹங்களோடும் கூடியுள்ளவன்.

10. தோஷை: அதுஷ்டம். *அவரவர் சமயந்தோறும் தோய்விலன்* சேதநாசேதநபதார்த்தங்களிலுள்ள தோஷங்களின் பற்று இல்லாதவன்.

ஆக இப்படிப்பட்ட எம்பெருமானை ஸகலஜகதாகாரனாகப் பெருமகிழ்ச்சியோடு ஆழ்வார் துதித்தருளினார் நான்காந்திருவாய் மொழியில்.... .... (*)

த்ரமிடோபநிஷத்ஸங்கதி.

ஸர்வம் ஜகத் ஸமவலோக்ய விபோச் சரீரம்
தத்வாசிநஸ் ஸகலாநபி சப்தராசீந்।
தாந் ஸ்ருஷ்டதத்வாதிகஸம்பவாம்ஶ்ச பதார்த்தாந்
தாஸ்யம் அகார ஸ வசஸைவ சடாரிஸூரி:॥

(கருத்து) ஆழ்வார் இந்த நான்காந்திருவாய் மொழியில், ஸகல ஜகத்தையும் எம்பெருமானுடைய வடிவமாகவே கண்டும், உலகத்திலுள்ள அவ்வோ பதார்த்தங்களைச் சொல்லக்கடவ ஸகல சப்தராசிகளையும் எம்பெருமானுக்கு வாசகங்களாகவே கண்டும், பஞ்ச பூதங்களென்ன அவற்றின் காரியப் பொருள்களென்ன இவற்றை யெல்லாம் எம்பெருமானாகவே பேசி, இங்ஙனம் பகவத் விஷயத்தில் வாசிகமான அடிமையைச் செய்தருளினார் என்றதாயிற்று. ... . (*)

திருவாய்மொழி நூற்றந்தாதி.

புகழொன்றுமால் எப்பொருள்களுந் தானாய்
நிகழ்கின்ற நேர்காட்டி நிற்க—மகிழ்மாறன்
எங்கு மடிமைசெய இச்சித்து வாசிகமாய்
அங்கடிமை செய்தான்மொய்ம் பால்.

புகழ் ஒன்று மால்	கீர்த்தி பொருந்திய ஸர்வேச்வரன்	அடிமை செய இச்சித்து	தொண்டு செய்ய விரும்பி
எப்பொருள்களும் தான் ஆய் நிகழ்கின்ற நேர் காட்டி நிற்க	ஸகலபதார்த்தங்களும் தானேயாய் இருக்கின்றபடியைக் காட்டி நின்றவளவில்	மொய்ம்பால்	*மயர்வறமதிநல மருளப் பெற்ற சீர்மையினாலே
மகிழ் மாறன்	(அதனால்) மகிழ்ச்சி கொண்ட ஆழ்வார்	வாசிகம் ஆய் அடிமை செய்தான்	வாய்மொழியினாலாகிய கைங்கரியத்தைச் செய்தார்.
எங்கும்	எவ்விடத்தும்		

கீழ் *ஒழிவில்காலமெல்லா மென்கிற திருவாய்மொழியில் கைங்கர்ய மனோரதங்கொண்ட ஆழ்வாருடைய பாரிப்புக்குத் தகுதியாக எம்பெருமான் தானே எங்கும் எல்லாப் பொருள்களுமாய் நிற்கின்ற படியை ஆழ்வார்க்கு ஸேவை ஸாதிப்பிக்க, ஆழ்வாரும் எம்பெருமானுடைய விபூதியுள்ள விடங்களிலெல்லாம் காயிக கைங்கரியம் செய்யவிரும்பி, அது செய்ய இயலாமல் எம்பெருமானுடைய ஸர்வாத்மபாவத்தைப் பேசும்முகத்தால் வாசாகைங்கரியத்தை இத்திருவாய் மொழியில் செய்தருளினார் என்றதாயிற்று. .... (உச)

ஜீயர்திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி—மூன்றும்பத்து,

ஐந்தாந்திருவாய்மொழி—மொய்ம்மாம்பூம்பொழில்.

அவதாரிகை:—ஆழ்வார் கீழ்த்திருவாய்மொழியில் எம்பெருமானை மிகவும் அற்புதமாக அநுபவித்தார். அந்த அநுபவத்தினுல் அபரிமிதமான ஆனந்தத்தையடைந்தார். திருவுள்ளத்திலுண்டான ஆனந்தம் வடிவிலே தொடைகொண்டது; அதனுல் ஆடுவதும் பாடுவதுமாகத் தாம் ஆயினர்; இந்நிலவுலகத்தில் இங்ஙனே பகவத்குணங்களில் ஈடுபட்டுக் களித்துப் பரவச சரீரர்களாக இருப்பவர்கள் எத்தனைபேருண்டு? என்று ஆராயத் தொடங்கினர்; அன்னவர் மிகச் சிறுபான்மையராய், பகவத்குணங்களில் ஈடுபடாதபாவிகளே பெரும்பான்மையராய் இருப்பதைக்கண்டு திருவுள்ளம்மிக நொந்து, ஈடுபாடுடையாரைக் கொண்டாடியும் அஃது இல்லாதாரை நிந்தித்தும் செல்லுகிருர் இத்திருவாய்மொழியில்.

*முந்நீர் ஞாலம்படைத்த வென்கிற திருவாய்மொழியில் அளவுகடந்த துயரத்தையடைந்தார்; *புகழுநல்லொருவனில் அளவுகடந்தகளிப்பையடைந்தார்; ஹர்ஷசோகங்கள் கூடாதென்று சாஸ்த்ரங்களில் மறுக்கப்பட்டிருக்கின்றதே; ஸ்ரீபாஷ்யத்தில் பக்திக்கு உறுப்பான விவேகம் முதலிய ஏழை நிரூபித்துவருமிடத்து, "அநவஸாத:, அநுத்தர்ஷ:" என்று முடிவில் இரண்டு சொல்லப்பட்டன; இவற்றுள் அநவஸாதமாவது—துயருற்றிராமை; அநுத்தர்ஷமாவது—ஹர்ஷஹேதுக்களுண்டானாலும் அதிஹர்ஷங்கொள்ளாதொழிகை; என்று விவரிக்கப்பட்டுளதன்ரே; ஆகவே ஹர்ஷசோகங்கள் கூடாதனவாயிருக்க, ஆழ்வார் அவற்றை ஏன் கொள்ளுகிருர் என்று சிலர் சங்கிக்கக்கூடும்; ப்ராக்ருதவிஷயங்களைப் பெற்றதனுலுண்டாகும் களிப்பும், அவற்றை இழப்பதனுலுண்டாகும் கவர்வும் கூடா என்பதே சாஸ்த்ரதாத்பர்யம்; பகவத் குணநுபவத்தினுலுண்டாகும் ஆனந்தமும் அடக்கமுடியாது; அவ்வநுபவம் மற்றையோர்க்கு இல்லையேயென்று உண்டாகும் க்லேசமும் அடக்கமுடியாது என்க.

எம்பெருமானுடைய குணநுபவம் விஞ்சினுல், நின்றவிடத்தில் நிற்கமுடியாமல் ஆடுவதும் பாடுவதுமான நிலைமை பரவசமாக உண்டாகியேதீரும். முக்தர்களும் திருநாட்டில் "அஹமந்நமஹமந்நமஹமந்நம்! அஹமந்நாதோஹமந்நாதோஹமந்நாத:!" என்று களித்துப்பாடுவர்களென்றது. நாரதமுனிவர் முதலானேரும் பகவத்ஸந்நிதியிலே வந்தவாறே ஆடுவது பாடுவதாகாநிற்பர்களென்று சொல்லப்பட்டுளது. இதுவன்றே நம்முடைய கரசரணுதி அவயவங்களுக்குப் பயன். இப்பயன் பெருத பாவிகளைப் பழிப்பதும் இது பெற்ற பெரியாரைப் புகழ்வதும் பகவதநுபவத்திலே ஒருவகையாதலால் அவை இத்திருவாய்மொழியிற் செல்லுகின்றன. ... . *

மொய்ம்மாம்பூம்பொழிற்பொய்கை முதலைச்சிறைபட்டுநின்ற*
கைம்மாவுக்கருள்செய்த கார்முகில்போல்வண்ணன்கண்ணன்*
எம்மானைச்சொல்லிப்பாடி யெழுந்தும்பறந்துந்துள்ளாதார்*
தம்மால்கருமமென்சொல்லீர் தண்கடல்வட்டத்துள்ளீரே. (க)

தண் கடல் வட்டத்து உள்ளீர்	குளிர்ந்த கடல்சூழ்ந்த பூமண்டலத்திலுள்ளவர்களே!,	கார் முகில் போல் வண்ணன்	காளமேகச்யாமளனை
மொய்	நெருங்கின	கண்ணன் எம்மானை	ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மாவை
மா	பெரிய	சொல்லி பாடி	புகழ்ந்துபாடி
பூ பொழில்	பூஞ்சோலைகளையுடைய	எழுந்தும்	இருந்தவிடத்திலிராமல் எழுந்தும்
பொய்கை	தடாகத்தில்		
முதலை	முதலையினுல்	பறந்தும்	பூமியில் கால் பாவாதபடி அலைந்தும்
சிறை பட்டு	கவ்வப்பட்டு		
நின்ற	கரையேறமாட்டாது வருந்தி நின்ற	துள்ளாதார் தம்மால்	களித்துக்கூத்தாடாதவர்களால்
கை மாவுக்கு	கஜேந்திராழ்வானுக்கு	என் கருமம்	என்ன பயன்?
அருள் செய்த	க்ருபைபண்ணின	சொல்லீர்	சொல்லுங்கள்.

* * * [மொய்ம்மாம்பூம்பொழில்.] ஸ்ரீகஜேந்திராழ்வானை ரக்ஷித்தருளின எம்பெருமானுடைய இந்த ஆச்ரித வாத்ஸல்யத்தையநுஸந்தித்தும் விகாரமடையாதிருப்பாருடைய பிறப்பு வீண் என்கிருர்.

மஹாவிஷ்ணு பக்தனை கஜேந்திரன் அர்ச்சனைக்காகப் பூப்பறிக்க ஒரு பெரிய பொய்கையிற் சென்றிழிந்ததும் அங்கு முதலையின்வாயில் அகப்பட்டு வருந்தியதும், பிறகு 'ஆதிமூலமே!' என்று கூவியழைக்க, உடனே திருமால் கருடாரூடனுய் அங்கு எழுந்தருளித் தனது சங்கராயுதத்தைப் பிரயோகித்து முதலையைத்துணித்து யானையை அதன்வாயினின்று விடுவித்து இறுதியில் அதற்கு முக்தியளித்ததும் ப்ரஸித்தம்.

கஜேந்திராழ்வான் தானிருக்கின்றவனத்திலே நெடுநாள் மழைபொழியாமையால் தாமரைக்குளங்களெல்லாம் வறண்டமைபற்றி எங்குந்தாமரைமலர் கிடைக்கப்பெறுமல் சிலநாளாக அர்ச்சனை தவிர்ந்து அதனுலாகிய வருத்தத்தினுல் உணவுகொள்ளாமற் பட்டினிகிடந்து ஏங்கி மலர்தேடுகின்றபோது தெய்விகமாக ஒரு நறுமணத்தை மோப்பஞ்செய்து அதனையே பிடித்துக்கொண்டு அதுவந்த வழியால் விரைந்து செல்லுகையில் ஒரு மலையின்மீது திவ்யமான ஒரு சோலையையும் அதன் நடுவே ரமணீயமான ஒரு தடாகத்தையுங்கண்டு அதில் நிறைந்திருக்கின்ற தாமரைமலர்களைப் பார்த்ததனுல் மிகமகிழ்ந்து அவற்றினிடத்திற் கொண்ட ஆதராதிசயத்தினுல் அம்மடுவில் முதலையிருப்பதைப்பாராமலே விரைந்திறங்கி மலர் கொய்வதாயிற்றென்பது விளங்க "மொய்ம்மாம்பூம் பொழிற்பொய்கை முதலைச்சிறைபட்டு நின்ற கைம்மா" என்ருர்.

அருள்செய்த = "பெண்ணுலாஞ்சடையினனும் பிரமனு முன்னைக்காண்பான் எண்ணிலாவூழியூழித் தவஞ்செய்தார் வெள்கிநிற்ப, விண்ணுளார் வியப்பவந்து ஆனைக்கு அன்றருளையீந்த" என்று (திருமாலையில்) தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிய பாசுரங்காண்க. ஆழ்வான் ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் "ஸுரஸுரேஷ்வபி ஸமாவ்ரிதஸுஷ்டபமூர்த்தி வாதம் வாராபாஸமஷேடவிதா காரணீஷா = ஆஜகமுகஸ் தவ கஜேந்த்ரமப்ருமஹிகேத பதம் பராமம்ருசுஷாபி ச கா மநீஷா ?" என்றார். அதாவது — கஜேந்திராழ்வானுடைய கூக்குரல் செவிப்பட்டவாறே பதறிப் பொய்கைக்கரைக்கு வந்ததுமன்றி, முதலைவாய்ப்பட்டுப் புண்பட்ட அதன் காலைத் திருக்கைகளினால் தடவி உபசாரங்கள் செய்தபடியும் கூறப்பட்டதாயிற்று; இதுவே கைம்மாவுக்குச்செய்த கனத்த அருள்.

இங்ஙனே எம்பெருமானுடைய பேரருள் பொலிவுபெறும் இந்தச்சரித்திரத்தை அநுஸந்தித்தால் மனமொழிமெய்கள் விகாரப்படாதிருக்கவொண்ணுமோ? எம்மானைச்சொல்லிப்பாடியெழுந்தும் பறந்தும் துள்ளவேண்டும்படியாகுமே; அங்ஙனம் ஆகப்பெறாதவர்கள் இவ்வுலகில் ஜனிப்பதனாலும் இருப்பதனாலும் என்ன பலன் ?.

இங்கே நம்பிள்ளையீடு ;— "பட்டர் இவ்விடத்தை அருளிசெய்யாநிற்கச் செய்தே 'அவன் நூறுயிரஞ் செய்தாலும் விக்ருதராகாமைக்கு நாமேவேணும்; நமக்கொரு ஆபத்து உண்டானால் இருந்த விடத்திலே இருக்கமாட்டாதே விக்ருதனாகைக்கும் அவனேவேணும்' என்றருளிச்செய்தார்". என்பதாம். எம்பெருமானைப்போன்ற பரமதயாளு இல்லை; அவனது தயையில் ஈடுபடமாட்டாத நம்மைப்போன்ற வன்னெஞ்சருமில்லை என்றபடி. ... ... (௧)

தண்கடல்வட்டத்துள்ளாரைத் தமக்கிரையாத்தடிந்துண்ணும்※
திண்கழற்காலசுரர்க்குத் தீங்கிழைக்குந்திருமாலை※
பண்கள்தலைக்கொள்ளப்பாடிப் பறந்துங்குனித்துழலாதார்※
மண்கொளுலகிற்பிறப்பார் வல்வினைமோதமலைந்தே. (௨)

தண் கடல் வட்டத்து உள்ளாரை	குளிர்ந்த கடல் சூழ்ந்த பூமண்டலத்திலுள்ள ஜனங்களை	பண்கள் தலைக்கொள்ள பாடி	இசை மிகும்படி பாடி
		பறந்தும்	உயரக்கிளம்பியும்
தமக்கு இரை ஆ	தங்களுக்கு உணவாக	குனித்து	ஆடியும்
தடிந்து உண்ணும்	கொன்று தின்கிறவர்களும்	உழலாதார்	எங்குந்திரியாதவர்கள்
திண் கழல் கால்	திண்ணிய வீரக்கழல்களையணிந்த காலையுடையவருமான	மண் கொள் உலகில்	மண்ணுலகத்தில்
அசுரர்க்கு	ஆஸுரப்ரக்ருதிகளுக்கு	வல் வினை மலைந்து மோத	கொடிய பாவங்கள் மேலிட்டு நலியும்படியாக
தீங்கு இழைக்கும் திருமாலை	அநர்த்தங்களை விளைவிக்கின்ற திருமாலை	பிறப்பார்	பிறப்பர்கள் [நித்திய ஸம்ஸாரிகளாய்க் கிடப்பர்களென்றபடி].

※ ※ ※ [தண்கடல் வட்டத்து.] ஸகல ஜகத்தினுடையவும் துன்பங்களைப்போக்கிக் காத்தருளுமியல்வினனான திருமாலினது இந்நீர்மையில் ஈடுபடமாட்டாதவர்கள் ஸம்ஸார நிலத்தில் மேன்மேலும் பிறந்து படுவர்களென்கிறாரிப்பாட்டில் கடல்சூழ்ந்த மண்ணுலகிலுள்ளவர்களைக் கொன்று தமக்கு இரையாகத்தின்று திரியும் ஆஸுரப்ரக்ருதிகளுக்கு அநர்த்தங்களை விளைக்கின்ற எம்பெருமான் விஷயமாக இசைகளைப்பாடி நெஞ்சுகனிந்து கூத்தாடிக் களிக்கப்பெறாதவர்கள் ஒருநாளும் கழிக்கப்போகாத கொடிய பாவங்கள் மேலிட்டுத் துன்புறுத்தும்படி மீண்டுமீண்டும் பிறந்துமிறந்தும் போருவர்களென்றாராயிற்று.

அசுரர்க்கு என்றது அஸுரஜாதியிற் பிறந்தவர்களுக்கு என்றபடியன்று; பகவத்கீதையில் பதினாறவது அத்தியாயத்தில் "த்வௌ பூதஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச." என்று சொல்லப்பட்டிருப்பதுகாண்க. பகவத் பாகவத விஷயங்களில் நன்மைபுரிவாரடங்கலும் தேவப்ரக்ருதிகள் என்றும், தீமைபுரிவாரடங்கலும் ஆஸுரப்ரக்ருதிகளென்றும் கொள்ளக்கடவர்கள்.

தீங்கிழைக்கும் திருமாலை என்றவிடத்து, திரு என்றது குறிக்கொள்ளத்தக்கது; "ஸஹயஸுஹ்ருதம் பரமஸௌஹ்ருதம் ஸாதா ஸுஜநஸ்ய ஸஹயீம் ஸதி ஸூதஜநா தரிஹரா = ஸஹதர்மசரீம் சௌரேஸ் ஸம்மந்த்ரித ஜகத்திதாம், அநுக்ரஹமயீம் வந்தே நித்யமஜ்ஞாதநிக்ரஹாம்." (யதிராஜஸப்ததி.) என்கிறபடியே நிக்ரஹமென்பதைக் கனவிலுமறியாத பிராட்டியுங்கூட எம்பெருமானோடு சேர்ந்து நிக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றும்படி தீமைகளைச் செய்கின்றனராம் ஆஸுரப்ரக்ருதிகள்.

ஆஸுரப்ரக்ருதிகளைத் தொலைத்து தேவப்ரக்ருதிகளைக் காத்தருளுமெம்பெருமான்திறத்து ஈடுபடாதவர்கள் நித்யஸம்ஸாரிகளாய்த் தொலைந்து போவர்கள் என்றதாயிற்று. .... (௨)

மலையையெடுத்துக்கன்மாரிகாத்துப்பசுநிரைதன்னை※
தொலைவுதவிர்த்தபிரானைச் சொல்லிச்சொல்லிநின்றெட்டோதும்※
தலையினோடாதனந்தட்டத் தடுகுட்டமாய்ப்பறவாதார்※
அலைகொள்நரகத்தழுந்திக் கிடந்துழைக்கின்றவம்பரே. (௩)

மலையை	கோவர்த்தன மலையை	சொல்லி சொல்லி	பலகாலுஞ் சொல்லி
எடுத்து	குடையாகத் தூக்கி	எப்போதும்	எப்பொழுதும்
கல் மாரி	கல் மழையை	நின்று	நிலைநின்று
காத்து	தடுத்து	ஆதனத்தோடு தலை தட்ட	தரையிலே தலைபடும்படியாக
பசு நிரை தன்னை	பசுக்கூட்டத்தை	தடுகுட்டம் ஆய்	தலைகீழாக
தொலைவு தவிர்த்த பிரானை	துன்பந்தவிர்த்த எம்பெருமானை	பறவாதார்	ஸம்ப்ரமியாதவர்கள்

அலைகொள் நரகத்து	துக்கப்படுத்துவதையே இயல்வாகவுடைய நரகத்தில்	அழுந்தி கிடந்து	அழுந்தியிருந்து
		உழைக்கின்ற	வருந்துகின்ற
		வம்பர்	வீணராவர்.

* * * [மலையையெடுத்து] இடையர்கள் இந்திரனுக்குப் பூஜைசெய்யப் பலபல வண்டிகளில் சோறும் தயிரும் நெய்யும் காய்கறிகளும் மற்றுமுள்ள பூஜைப் பொருள்களையும் அமைப்பதைக்கண்ட கண்ணபிரான் அவற்றை இந்திரனுக்கு இடவொட்டாது தடுத்துக் கோவர்த்தனமலைக்கு இடச்சொல்லி, பிறகு தான் அம்மலையில் ஆவேசித்து அவற்றையெல்லாம் தானே யமுது செய்திட, பின்பு பூஜையிழந்த இந்திரன் சீற்றமுற்று ஏழுநாள் விடாமழை பெய்வித்தபோது அம்மலையையே பிடுங்கிக் குடையாகத்தூக்கித்தாங்கி, கோகுலத்தைச் சேர்ந்த ஸகலபிராணிகளையும் அதன்கீழ் அழைத்துக்கொண்டு சிறிதும் அபாயமின்றிக் காப்பாற்றியருளின பெருங்குணத்தில் ஈடுபட்டு விக்ருதராகாதவர்கள் நித்திய ஸம்ஸாரிகளாயொழிவர்களென்கிறார்.

"தலையினோடு ஆதனம் தட்டத் தடுகுட்டமாய்" என்றது தலைகீழாகத் துள்ளும்படியைக் கூறியவாறு. "ஆதனத்தோடு தலைதட்ட" என்று உருபு பிரித்துக் கூட்டியுரைப்பர்கள். இங்கு ஆதனமென்று தரையைச் சொன்னபடி. இங்ஙனே ஆடுகிற கூத்து குணலைக் கூத்து என வழங்கப்படும். "கோத்துக் குழைத்துக் குணலைமாடித்திரிமினோ" என்ற பெரியாழ்வார் திருமொழியுங் காண்க.

அலைகொள்நரகத்து=அலை என்று நீரில் தோன்றும் அலைக்கும் துக்கத்திற்கும் பெயர். அவ்விருபொருளும் இங்குப்பொருந்தும். "ஹூஜந்மஜராம்ருதி க்லேசகர்மஷடூர்மிக:—கர்ப்பஜந்மஜராம்ருதிக்லேச கர்மஷடூர்மிக:" என்கிற பட்டர் ஸ்ரீஸூக்தியின்படியும் "தம் வீக்ஷ்ய வைதுஷ்யநாவி ப்ரவீணவசஸ: ஸஷட்ஊர்மி பஹூலம் ஜலதிம் தரந்தி—தம் வீக்ஷ்ய ஸேது மதுநாபி சரீரவந்த: ஸர்வே ஷடூர்மி பஹுலம் ஜலதிம் தரந்தி." என்கிற தேசிக ஸ்ரீஸூக்தியின்படியும் இந்த ஸம்ஸாரஸாகரம் ஆறுவகையான அலைகள் நிரம்பப்பெற்றதென்னுமிடம் அறியத்தக்கது. இங்கு நரகமென்றது ப்ரத்யக்ஷநரகமாகிய ஸம்ஸாரத்தையே சொன்னபடியாகலாம்.

வம்பர்—புதுமை மாறாதவர்கள்; (அதாவது) நலிகின்ற யமபடர்கட்கு அப்பொழுதைக்கப்பொழுது புதியராகவே யிருப்பவர்களென்கை. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்:—"முன்னாள் நலிந்தால் பிற்றை நாள் வந்து தோற்றினால் 'முன்னாள் நாம் நலிந்தவன்' என்று க்ருபைபண்ணாதே ரோசம்பழம் பெற்றாற்போலே 'வாரீரோ! உம்மையன்றோ தேடித்திரிகிறது' என்னும்படியாவர்." (௩)

வம்பவிழ்கோதைபொருட்டா மால்விடையேழுமடர்த்த*
செம்பவளத்திரள்வாயன் சிரீதரன்தொல்புகழ்பாடி*
கும்பிடுநட்டமிட்டாடிக் கோகுகட்டுண்டுழலாதார்*
தம்பிறப்பால்பயனென்னே சாதுசனங்களிடையே. (௫)

வம்பு அவிழ் கோதை பொருட்டா	நறுமணம் மிக்க பூமாலை யணிந்துள்ள நப்பின்னைக்காக	பாடி	வாயாரப்பாடி
மால் விடை ஏழும் அடர்த்த	பெரிய ரிஷபங்களேழையும் வலியடக்கினவனும்	கும்பிடு நட்டம் இட்டு ஆடி	தலைகீழாகக் கூத்தாடி
செம் பவளம் திரள் வாயன்	சிவந்த பவளம் போன்று திரண்ட அதரத்தையுடையவனுமான	கோகு உகட்டுண்டு	அடைவுகேடு தலையெடுத்து
சிரீதரன்	திருமாலினது	உழலாதார்	ஸம்ப்ரமியாதவர்கள்
தொல் புகழ்	நிஜமான புகழை	சாது சனங்கள் இடையே	ஸாத்விக ஜனங்களின் நடுவிலே
		தம் பிறப்பால்	ஜனிப்பதனால்
		என் பயன்	என்ன பயனோ!

* * * [வம்பவிழ்கோதை.] கும்பனென்னும் இடையர் தலைவனது மகளும், நீளாதேவியின் அம்சமாகப் பிறந்ததனால் நீளாஎன்ற பெயரால் வழங்கப்பட்டு வருபவளுமான நப்பின்னைப் பிராட்டியை மணஞ்செய்து கொள்ளுதற்காக அவள்தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி யாவர்க்கும் அடங்காத அஸுராவேசம் பெற்ற ஏழு எருதுகளையும் கண்ணபிரான் ஏழுதிருவுருக்கொண்டு சென்று வலியடக்கி அப்பிராட்டியை மணஞ்செய்து கொண்டனன் என்ற இவ்வரலாற்றை அழகாகப்பாடிக்கொண்டு தலைகீழாகக் கூத்தாடி அடைவுகெட ஆரவாரஞ்செய்து திரியாத பாவிகள் ஸாத்விககோஷ்டிகளின் நடுவே தாங்களும் சிலராய்ப் பிறந்து திரிவது ஏனோ என்று வெறுத்துரைக்கின்றார்.

வம்பவிழ்கோதை—கோதையென்று பூமாலைக்குப் பெயர்; அதனையணிந்துள்ள மயிர்முடிக்கு இலக்கணை. பரிமளம்மிகுந்த அளகபாரத்தையுடைய நப்பின்னையென்று பொருள்படுதலால் அன்மொழித்தொகை.

செம்பவளத்திரள்வாயன்— விரோதி நிரஸநஞ்செய்து திருமணம் புணர்ந்த உவப்பினால் முறுவல்செய்து நின்றநிலை ஆழ்வார்க்கு ப்ரத்யக்ஷமாயிருக்கிறபடி. தொல்புகழ்—அந்த எருதுகளின் வலியையடக்கினது ஈ எறும்பு கொசு முதலியவற்றை நசுக்குவதுபோலே கண்ணபிரானுக்கு ஆயாஸமறச் செய்த செயலாதலால் அதனைத் தொல்புகழென்கிறாரல்லர்; அப்பெருமானுடைய ஸௌலப்ய ஸௌசீல்யங்களை இங்குத் தொல்புகழாம்.

கோகுஉகட்டுண்டு=கோகு—அடைவுகேடு, (அதாவது) அக்கிரமம்; அது மேலிட்டு; "அத்யந்தபக்தியுக்தானாம் ந சாஸ்த்ரம் நைவ க்ரம:—அத்யந்தபக்தியுக்தாநாம் ந சாஸ்த்ரம் நைவச க்ரம:" என்கிறபடியே பக்தியின் மிகுதி சொன்னவாறு. வில்லிபுத்தூரார் பாரதத்தில், விராடபருவம்—நிரைமீட்சிச் சருக்கத்தில்

(68) "ஏகுகின்ற பேரிராசராசனை · யெதிர்தகைந்து, கோகுதட்டிடு தனஞ்சய னிவையிவை கூறும்" என்ற செய்யுளில் "கோகுதட்டிடு" எனவருதலுங்காண்க.

"பயனென்னே சாதுசனங்களிடையே" என்றவிடத்து ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—

> "திருப்புன்னைக்குக் கீழே ஒருவரிருக்குமிடத்திலே நம்முதலிகள் பத்துப் பேர்கூட நெருங்கிக்கொண்டிருக்கச் செய்தே, க்ராமணிகள் மயிரெழுந்த பிசல்களும் பெரியவடிவுகளும் மேலே சுற்றின இரட்டைகளுமாய் இடையிலே புகுந்து நெருங்குமாபோலே காண்! என்று பிள்ளைப்பிள்ளை."
>
> என்பதாம்.

இதன் கருத்தாவது—திருவரங்கம் பெரிய கோயிலில் திருப்புன்னைமரத்தின் கீழே நம்முதலிகள் இருந்து சாஸ்த்ரார்த்த விசாரங்கள் செய்தருளாநிற்பர்கள்; அவற்றைக் கேட்டுக் களிக்கவேணுமென்கிற ஆசையினால், நெருக்கமான அவ்விடத்திலும் பல ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒருவர்மேலொருவராக நெருங்கிக்கொண்டு நின்று கேட்பர்களாம்; ஸ்ரீவைஷ்ணவர்கள் எத்தனைபேர்கள் நெருங்கினாலும் வருத்தமில்லை; அந்த நெருக்கத்தைக்கண்டு ஸாமாந்ய ஜனங்களும் அங்குத் தங்களுக்கு ஏதோ லாபம் கிடைப்பதாக மயங்கி, மொசமொசவென்று மயிர்கள் நெருங்கிய தோள்களும் ஸ்தூலதேஹமும் தலைப்பாகையுமாய் அங்கே புகுந்து நெருக்குவது வழக்கமாம்; அது எப்படி அஸஹ்யமோ, அப்படியே ஸாத்விக ஜனங்களிடையே பாபிகள் பிறந்திருப்பதும் அஸஹ்யமென்றதாயிற்று. பிள்ளைப் பிள்ளை யென்பவர் கூரத்தாழ்வான் திருவடிகளில் ஒருவர். ... . (௪)

சாதுசனத்தைநலியுங் கஞ்சனைச்சாதிப்பதற்கு*
ஆதியஞ்சோதியுருவை அங்குவைத்திங்குப்பிறந்த*
வேதமுதல்வனைப்பாடி வீதிகடோறுந்துள்ளாதார்*
ஓதியுணர்ந்தவர்முன்னா என்செவிப்பார்மனிசரே. (௫)

சாது சனத்தை நலியும்	ஸாத்விகர்களைத் துன்பப்படுத்தின	பாடி	வாயாரப்பாடிக் கொண்டு
கஞ்சனை	கம்ஸனை	வீதிகள் தோறும்	எல்லா வீதிகளிலும்
சாதிப்பதற்கு	தண்டிக்கும்பொருட்டு	துள்ளாதார்	களித்துத் திரியாதவர்கள்
ஆதி அம் சோதி உருவை	நித்தியமாய் அப்ராக்ருத தேஜோரூபமான திருவுருவை	ஓதி உணர்ந்தவர் முன்னா	சாஸ்த்ரங்களை ஓதி நன்கறிந்த மாஞானிகள் முதற்கொண்டு [எப்படிப்பட்ட வித்வான்களாயிருந்தாலும்]
அங்கு வைத்து இங்கு பிறந்த	பரமபதத்திலுள்ளபடியே ஸ்வீகரித்துக் கொண்டு இங்கிலத்தில் வந்து பிறந்தவனும்	என் சவிப்பார்	(அவர்கள்) ஜபம் செய்வது என்னே?
வேதம் முதல்வனை	வேதங்களினால் மூலப்பொருளென்று ஓதப்படுபவனுமான எம்பெருமானை	மனிசரே	(அவர்கள்) மநுஷ்ய கோடியிற் சேர்ந்தவர்களோ?

* * * [சாதுசனத்தை] அடியார்களின் விரோதிகளைத் தொலைப்பதற்காகத் தன்னுடைய அஸாதாரணதிவ்யரூபத்தோடு கூடவே வந்து திருவவதாரம் பண்ணின திருக்குணத்தை அநுஸந்தித்து ஈடுபடாதவர்கள் செய்கிற ஜபம் தபம் முதலியனவெல்லாம் உபயோகமற்றவை யென்கிறார்.

எம்பெருமான் தன்னளவிலே ஆஸுரப்ரக்ருதிகள் எத்தனை அபசாரப்பட்டாலும் அதனால் சிறிதும் திருவுள்ளம் சீறமாட்டான்; தன்னடியவர்பக்கல் அபசாரப்படுமளவில் அவ்வபராதிகளைப் பங்கப்படுத்தியே தீருவன் என்பது நாற்கொள்கை. "ஈச்வரன் அவதரித்துப் பண்ணின ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமையென்று ஜீயரருளிச்செய்வர்" என்று ஸ்ரீவசநபூஷணத்திற் பாசுரம். அதாவது — ஸங்கல்பமாத்திரத்தாலே எல்லாவற்றையும் நிர்வஹிக்கவல்ல ஸர்வசக்தியான ஸர்வேச்வரன் தன்னை அழியமாறி இதரஸஜாதீயனாய் அவதரித்துக் கைதொடனாய் நின்றுசெய்த ஹிரண்ய ராவண கம்ஸசிசுபாலாதி நிரஸநரூபமான அதிமாநுஷக்ருத்யங்களெல்லாம் ப்ரஹ்லாதன் மஹரிஷிகள் வஸுதேவதேவகிகள் முதலான பாகவதர்திறத்தில் அவ்வவர் பண்ணின அபசாரம் ஸஹியாமையாலே என்று நஞ்சீயர் அருளிச்செய்வராம். இவ்வர்த்தமே இப்பாட்டில் "சாதுசனத்தை நலியுங் கஞ்சனைச் சாதிப்பதற்கு" என்பதனால் தெரிவிக்கப்படுகிறது.

எம்பெருமான் தன்னளவிலே தீரக்கழிய அபராதப் படுமவர்களைப் பற்றி ஒன்றும் கணிசியான்; ஆச்ரிதர்திறத்தில் ஸ்வல்பாபராதம் பண்ணுவானுண்டாகிலும் அவனை அப்போதே தலையறுத்துப் போகடுவானென்பது இதிஹாஸ புராணப்ரசித்தம். "[வ்யஸநி ஷராவணே கிம் காயஞ் ஸீதயா மம — த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம.]" இராமபிரானெழுந்தருளிநிற்கச் செய்தே இராவணன் கோபுரசிகரத்திலே வந்து தோற்றினவாறே 'ராஜத்துரோகியான இப்பயல் பெருமாள் திருமுன்பே நிற்கையாவதென்'? என்று ஸுக்ரீவ மஹாராஜர் அவன்மேலே பாய்ந்து வென்று வந்தபோது அவரை நோக்கிப் பெருமாள் இங்ஙனே அருளிச் செய்கிறார்;—நீர் மஹாராஜரான தாம்குலைய [உம்மைத் திரஸ்கரித்து] அந்த ராக்ஷஸப்பயல் ஒருவார்த்தை சொன்னானாகில் அல்லது ஒரு சிறிய சேஷ்டை செய்தானாகில் பிறகு ஸீதைதானும் எனக்கு எதுக்கு? என்றார். ஆச்ரிதவிஷயத்திலே எம்பெருமானுடைய பக்ஷபாதம் இப்படியன்றோ இருப்பது. தன் உயிர்நிலையான பாகவதர்களுக்கு ஒரு தீங்கு நேர்ந்தால், தனக்குத் தீங்குநேரும்போது பிறக்கும் சீற்றம் அற்பமென்னும்படி சீற்றம் பெருகிச் செல்லும். இதற்கு நிதர்சநம்—தான் ஸமுத்ரராஜனை சரணம்புகச் செய்தேயும் அவன் முகங்காட்டிற்றிலனாக "கோபமாஹாரயத் தீவ்ரம் — கோபமாஹாரயத் தீவ்ரம்" என்னும்படி சீற்றத்தை வரவழைத்துக் கொண்டார் பெருமாள்: பின்பு இராவணனாலே அனுமான்

கோபப்பட்டபோது "ததோ ராமோ மஹாதேஜா: ராவணேந க்ருதவ்ரணம்| த்ருஷ்ட்வா ப்லவகசார்தூலம் கோபஸ்ய வசமேயிவாந்—ததோ ராமோ மஹாதேஜா: ராவணேந க்ருதவ்ரணம், த்ருஷ்ட்வா ப்லவகசார்த்தூலம் கோபஸ்ய வசமேயிவாந்." என்னும்படி கோபமிட்ட வழர்காரர். இங்ஙனேயிறே பாகவத விஷயத்திலே எம்பெருமானுக்குள்ள பரிவின் மிகுதியிருப்பது. இப்பாசுரத்தில் ஆழ்வார் "சாதுசனத்தை நலியும்" என்றதனால் அந்தப் பரிவுதன்னையே விளக்குகின்றாரென்க. பகவத்கீதையில் நான்காமத்யாயத்தில் அவதாரப்ரயோஜநம் சொல்லுமிடத்து "பரித்ராணாய ஸாதூநாம்—பரித்ராணாய ஸாதூநாம்" என்று ஸாது பரித்ராணத்தை ப்ரதமப்ரயோஜநமாகப் பகவான் அருளிச்செய்திருக்கையாலே அதற்குச் சேர இப்பாட்டில் முதலடி அமைந்தது என்றுங் கொள்க.

சாதிப்பதற்கு—சாவிப்பதற்கு என்றபடி; சாஸ என்னும் வடமொழித் தாதுவடியாப்பிறந்த சொல் இது. "தம்மிடையே பொய்யானல் சாதிப்பார் ஆரினியே" என்ற நாச்சியார் திருமொழிப் பிரயோகமும் இவ்வகையாலே அமைந்தது. இவ்விடத்து ஈட்டில் "கம்ஸனை ஸாதிக்கைக்காக" என்கிற ஸ்ரீஸூக்தி காணப்படுதலால் 'சாதிப்பதற்கு' என்கிறஇச்சொல் 'ஶாஸநம்' என்கிற வட சொல்லடியாகவே பிறந்ததென்று கொள்வதே பொருந்தும். கிராதார்ஜுநீய காவ்யத்தில்(14—17) "ஸேஹாநு தஸ்ய வ்ரதிகாயஶாஸநம்" என்கிற பிரயோகமும், அவ்விடத்து மல்லிநாத வியாக்கியானத்தில்—"வ்ரதிகாயஸ்ய வ்ரதிவக்ஷஸ்ய, ஶாஸநம்—வத:, *ஶாஸநம் நிவர்ஹணம் தண்டஶ்ச வித்வத்ஸம்மத:* இதி விஶ்வ:." என்றுள்ள நிரூபணமும் காணத்தக்கன. ஆகவே "கம்ஸனை ஸாதிக்கைக்காக" என்கிற ஈட்டு ஸ்ரீஸூக்தியை "கம்ஸனை பாலிக்கைக்காக" என்று சிலர் திருத்துவது அவசியமற்றது என்றதாயிற்று. ஶாஸநம் என்பது போலே ஶாதநம் என்கிற ஒரு வட சொல்லுமுண்டு; ஸுஶாதநம் என்றபடி. அந்தச் சொல்லடியாக இங்கு "சாதிப்பதற்கு" என்கிற பிரயோகம் என்றும் கொள்வதற்கு இடமுண்டு; ஈட்டிலுள்ளபடியே நன்கு பொருந்தும்.

ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்து இங்குப்பிறந்த=தன்னுடைய அஸாதாரணமான அப்ராக்ருத சோதிவடிவைப் பரமபதத்திலே வைத்திட்டு ப்ராக்ருத ரூபத்தோடே இங்குவந்து பிறந்த=என்று சிலர் பொருள் கூறுவது செவியிலும் ஏற்கத்தகாதது. அங்குவைத்து என்பது ஒரு சொல்வடிவாம்; அங்குள்ளபடியே கொண்டு என்பது பொருள். கீதையில் (4—6) "அஜோபி ஸந்நவ்யயாத்மா பூதாநாமீஶ்வரோபி ஸந் | ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா" =அஜோபி ஸந் அவ்யயாத்மா பூதாநாமீச்வரோபி ஸந், ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாமி ஆத்ம மாயயா." என்றவிடத்து பாஷ்யத்தில்— "ஸ்வம் ஸ்வபாவம் ப்ரக்ருதிம் அஜஹதேவ ஸ்வம் ரூபம் அதிஷ்டாய... ஸ்வேநைவ ரூபேண ஸ்வேச்சயா ஸம்பவாமீத்யர்த்த:......ஸ்வமேவ ஸ்வஸ்வபாவம் ஸர்வேஶ்வரத்வாதிகம் ஸ்வமேவ

ரூபம் தேவமநுஷ்யாதி ஸஜாதீயஸம்ஸ்தாநம் குர்வந் ஸ்வஸங்கல்பேந தேவாதிரூபேண ஸம்பவாமி" என்று எம்பெருமானார் அருளிய ஸ்ரீஸூக்திகள் குறிக்கொள்ளத்தக்கன. "அங்கிருந்தபடியே வைத்துக்கொண்டு இங்கே வந்து பிறந்த". என்கிற இவ்விடத்து ஈட்டு ஸ்ரீஸூக்தியுங் காண்க.

வேதமுதல்வனைப்பாடி="அஜாயமாநோ பஹுதா விஜாயதே" இத்யாதி வேதவாக்கியங்கள் இங்கு விவக்ஷிதம். (ஈட்டுஸ்ரீஸூக்தி:—"இக்ஷ்வாகுவம்சத்திலே யுவநாச்வன் என்பானொருவன் மந்த்ரபூதமான ஜலத்தைப் பாநம் பண்ண அவன் வயிற்றிலே கர்ப்பமுண்டாயிற்றிறே ஒரு சக்தி விசேஷத்தாலே; மிதுநமாய் ஸம்ஸர்க்கித்துப் பிறந்ததன்றியிலேயிறே அங்கு; அப்படியே இங்கும் ஸர்வசக்தி யோகத்தாலே (மஹீக்கில் அந்வயமில்லாமையாகிற) இவ்வர்த்தம் உபபந்நமாகத் தட்டில்லையிறே; இதில் ப்ரமாணம்* அஜாயமாந:* என்ற ச்ருதியிறே; அத்தைச் சொல்லுகிறார் வேதமுதல்வனை யென்று.")

ஓதியுணர்ந்தவர்முன்னா="சாஸ்த்ராப்யாஸயுக்தரான ஜ்ஞாநாதிகர் ஸந்நிதியிலே" என்றார் பன்னீராயிரவுரைகாரர். இங்கு மற்ற வ்யாக்யாதாக்களின் திருவுள்ளம் வேறு; அதாவது—ஓதியுணர்ந்தவர் தொடங்கி என்பது பிள்ளான் நம்பிள்ளை முதலான ஆசாரியர்களின் திருவுள்ளம். வேத முதல்வனைப்பாடி வீதிகள் தோறும் துள்ளாதவர்கள் ஓதியுணர்ந்தவர்களாயிருந்தாலும் அவர்களையும் விடாது இந்த நிந்தை; அவர்களுக்குத்தான் முந்துற நிந்தை; "விதுஷோதிக்ரமே தண்டபூயஸ்த்வம்" என்று சாஸ்த்ரமாதலால் அவர்களுக்கே முந்துறமுன்னம் நிந்தை என்றபடி. "ஓதியுணர்ந்துவைத்து ஜ்ஞாநபலமில்லாமையாலே அவர்கள் நிஷ்பலமான வ்யவஸாயிகளென்று கருத்து" என்ற ஒன்பதினாயிரப்படியும் காண்க.

என் சவிப்பார்—என்ன ஜபம் பண்ணுவது? பகவத்பக்தியில் சிறந்தவர்கள்போல அபிநயங்கொண்டு மூக்கைப்பிடிப்பதும் கையை மூடிக்கொண்டு மௌனமௌனமென்பதுமாக இருந்தாலும் அதுகண்டு ப்ரமிக்கவேண்டா என்கிறார். ஜபிப்பர் என்பதே சவிப்பர் என்று கிடக்கிறது.

மனிசரே=அவர்கள் மநுஷ்ய கோடியில்தான் சேர்வர்களோ? "மானிடவரல்லரென்று என்மனத்தேவைத்தேனே" என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்திற்கு இதுவே மூலம். (ரு)

மனிசரும்மற்றும்முற்றுமாய் மாயப்பிறவிபிறந்த*
தனியன்பிறப்பிலிதன்னைத் தடங்கடல்சேர்ந்த பிரானை*
கனியைக்கரும்பினின்சாற்றைக் கட்டியைத்தேனையமுதை*
முனிவின்றியேத்திக்குனிப்பார் முழுதுணர்நீர்மையினாரே. (சு)

மனிசரும் மற்றும்	மநுஷ்ய யோநியாயும் தேவயோநியாயும்	இன் கரும்பின் சாற்றை	மதுரமான கருப்பஞ் சாறுபோன்றவனாய்
முற்றும் ஆய்	மற்றுமுள்ள ஸகல யோனியாயும்	கட்டியை	கற்கண்டுபோன்றவனாய்
மாயம் பிறவி பிறந்த	ஆச்சரியமான பிறவிகளில் பிறந்தருளின	தேனை	தேன்போன்றவனாய்
தனியன்	ஒப்பற்றவனாய்	அமுதை	அமிருதம் போன்றவனான எம்பெருமானை
பிறப்பு இலி தன்னை	கருமமடியான பிறப்பு இல்லாதவனாய்	முனிவு இன்றி	வெறுப்பு இல்லாமல் [மிக்க உவப்புடனே]
தடம் கடல் சேர்ந்த பிரானை	விசாலமான திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளும் பெருமானாய்	ஏத்தி குனிப்பார்	துதித்து நர்த்தனம் செய்பவர்கள்
கனியை	கனிபோன்றவனாய்	முழுது உணர் நீர்மையினோர்	ஸர்வஜ்ஞர்களெனக் கொண்டாடத் தக்கவர்கள்.

* * * [மனிசரும்மற்றும்.] மநுஷ்யாதி ரூபேண வந்து திருவவதாரம் பண்ணியருளின எம்பெருமானுடைய பரமபோக்யதையை அநுஸந்தித்துப் பரவசராயிருக்குமவர்கள்தாம் எல்லா அறிவின்பலனும் கைவந்திருக்குமவர்களென்கிறதிப்பாட்டில். மநுஷ்யரும் மற்ற தேவஜாதியும் அல்லாத திர்யக் ஜாதியுமெல்லாமாய்க் கொண்டு ஆச்சர்யமான அவதாரங்களைப் பண்ணி, எல்லாரோடும் ஸஜாதீயனாயிருக்கச் செய்தே மிகவும் விலக்ஷணனை அத்விதீயனாய், அந்த வைலக்ஷண்யத்திற்கு ஹேதுவான கர்மாதீந ஜந்மராஹித்யத்தையுடையனாய், அவதாரார்த்தமாக விசாலமான திருப்பாற் கடலிலே கண்வளர்ந்தருளுமவனாய், கோதற்ற இனிய கருப்பஞ்சாறும் கற்கண்டும் தேனும் அமுதமும்போலே போக்யதை தானே வடிவெடுத்தவனை எம்பெருமானை உகந்து துதித்துக் கூத்தாடுமவர்கள் ஸகலசாஸ்திரங்களின் ஸாரப் பொருள்களையும் அறிந்தவர்களென்று கொண்டாடுதற்குரியர் என்றதாயிற்று.

ஆழ்வானருளிச் செய்த வரதராஜஸ்தவத்தில் "ஸ்யக்ஷிமெஹாவிஹ தயெ விஹெதீநாம ஜயெ்ஷ வாநநம திமஸூாஜவ தாநு! ஸஜாதீயதெ்வஷாஜிதி தா விஹ வாவஷாஜவி ஹஜநு" இத்யாதி ஸ்ரீஸூக்தி இந்தப் பாசுரத்தின் ஒருபகுதியை உட்கொண்டது என்னலாம்.

இரண்டாமடியில் பிறப்பிலிதன்னை என்றிருப்பது முதலடிக்கு விருத்தமாயிருக்கின்றதே! என்று சிலர் சங்கிக்கக்கூடும்; பிறக்கின்றானென்று சொல்லிக் கொண்டே பிறப்பிலியென்கைக்குக் கருத்து யாதெனில்;—நாமெல்லாம் கருமமடியாகப் பிறப்பது போலே பிறவாதவன்—தன்னுடைய அநுக்ரஹமே காரணமாகப் பிறப்பவனேயன்றிக் கருமமடியாகப் பிறவாதவன் என்கை. (ஸ்ரீமதி 'எங்நின்ற யோனியுமாய்ப்பிறந்தாய் இமையோர் தலைவா" என்கிறபடியே நமக்காகப் பல பல பிறவிகளெடுத்தும் பரிச்ரமங்கள்பட்டும் நம்மிடத்துள்ள வ்யாமோஹாதிசயத்தினால் 'இவர்களுக்குநாம் ஒன்றுஞ் செய்யவில்லையே, நாம் ஒரு பிறவி

154929